ஆனந்த விகடன்

May 1926

௭

JL
MJM211,N26
N26.1.4.
160386

889 [Reg]istered No. M 2135 May 1926

# ஆனந்தவிகடன்

# ANANDAVIKADAN

A COMIC MONTHLY JOURNAL

அக்ஷய௵ வைகாசி மீ



மலர் 1. இ. கோவிந்தராஜுலு நாயுடு காய் 4.

"ஆனந்த விகடன் ஆபீஸ்"

சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்

All Rights Reserved

# " ஆனந்த விகடன் "

## சந்தா விவரம்.

| | |
|---|---|
| இந்தியா, சிலோன், பர்மா முதலிய உள் நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ. 2—0—0 |
| 6-மாதத்திற்கு | ரூ. 1—0—0 |
| பினங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளி நாட்டிற்கு வருஷம் 1-க்கு | ரூ. 2—8—0 |
| ஜீவிய சந்தா | ரூ. 25—0—0 |

வெளிநாட்டிற்கு ஓராண்டிற்கு உள்ளிட்டால், சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

1. எந்த மாதம் சேரினும் மாசி மீ முதல்கொண்டே கணக்கு சேர்க்கப்படும்.

2. கடிதம் எழுதுவோர் நம்பரைக் குறித்து தெளிவான நடையில் எழுதவும்.

3. பதில் வேண்டுவோர், ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

4. வியாசம் எழுதுவோர், இராஜதூஷணை, பிறதூஷணை, மததூஷணை இவை போன்றவைகளை நீக்கி தெளிவான நடையில் எழுதவேண்டும். வியாசங்களை குறைக்கவும் சேர்க்கவும் பத்திராதிபருக்கு அதிகாரம் உண்டு என்பதைக் கவனிக்கவும். பிரசுரிக்க இயலாத வியாசங்களை திருப்பி அனுப்பமுடியாது. வேண்டுமானால் ஸ்டாம்பு அனுப்பி திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

## உள்ளடக்க விபரம்.


| | | | |
|---|---|---|---|
| 1. ஓர்கவி | 121 | 16. சிவகங்கை | 15 |
| 2. பத்திரிகைகள் | 122 | 17. கம்பராமாயணம் | 15 |
| 3. விகடங்கள் | 123 | 18. கற்பு | 15 |
| 4. விகட சம்பாஷணைகள் | 130 | 19. பற்பல செய்தி | 15 |
| 5. விகடக் கதை | 131 | 20. அனுபவைத்தியக் குறிப்புகள் | 16 |
| 6. விகடப்பாட்டுகள் | 133 | 21. ஆனந்தவிகடன் வாழ்த்துப்பா | 16 |
| 7. கிச்சுண்டாம் | 135 | 22. கதருடைக்கண்ணியம் | 1 |
| 8. விகட அகில நீதி | 135 | 23. மதிப்புரைகள் | |
| 9. மடல்கள் | 138 | 24. முத்தாம்பாள் அல்லது மோகன வடிவு | |
| 10. விபூதி மகிமை | 143 | 25. ஆனந்தவிகடன் பங்குனி பரிசு பெற்றவர் | |
| 11. தமிழ் மொழியின் [illegible] | 145 | 26. ஆனந்தவிகடன் பஞ்சாங் | |
| 12. தபால் இலாகா [illegible] | 147 | | |
| 13. பலிப்பொருளில் | 148 | | |
| 14. விகடன் [illegible]ன்னப்பம் | 149 | | |
| 15. பெரிய புராணம் | 150 | | |


ஓம் 2

விகட விநாயகப் பரப்பிரம்மணே நம:



சாரதாம்பாள் துணை.

# ஆனந்த விகடன்


ஆசிரியர்:—விகடகவி, பூனூர்-வைத்தியநாதையர்.


### விகடவிநாயகர் துதி

" திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுரை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம் "


[REGISTRAR] 25 MAY 1926



| குலை 1 | அட்சய ஆண்டு, வைகாசித் திங்கள். 1926௵ மேமீ | காய் 4 |
|---|---|---|


## ஓர் கவி.

ஐங்கரன் றந்தைமக ளுங்குகன் றன்னடியை
அனுதினம் போற்று விகடன்
அனைவரும் மெச்சுமொரு சாரதாம்பாள் நேயம்
அமைந்துமே தோன்று விகடன்
இங்குறும் உத்தமர் புகழெலாம் போற்றியே
இசைவிலாப் பொய்யர் சூதர்
இவர்களின் விஷமமாந் தீயதோர் செய்கையை
இன்னில மறிய தூற்றி
மங்கையர் மாதவர் மன்னர்கள் காளையர்
மனமகிழ் திவ்ய கான
மன்றுபல விகடமும் மாநிலச் சேதியும்
மற்றுமிக நீதி யாவும்
துங்கமா யெழுதியே யுலகுபகர வச்செயும்
தூயமா விகடனைத் தான்
தோழமைக் கொண்டுபல ருங்கொள்ள வேணுமாய்
சுமுகனைப் போற்றி செய்வாம்.

# ஆனந்த விகடன்.

அட்சய௵ வைகாசி௴

## பத்திரிகைகள்.

விகடன் இம்மாதம் தலையங்கத்தில் எதைப்பற்றி வரைவதென்று யோசிக்கையில் ஒன்று தோன்றிற்று. அதாவது, பத்திரிகை என்னும் விஷயத்தைப்பற்றி பேசவே. உலகில் பத்திரிகைகள் பல பல பறக்கின்றன. அவைகளின் நோக்கங்கள் பல. அவற்றுள் முக்கியமானவை பரோபகாரம், தேச நன்மை, வருமானம் இம்மூன்றே. பரோபகாரமானது என்றால் 'நவசக்தி' 'ஊழியன்' போன்றவை. தேச நன்மையானது என்பது, 'தமிழ்நாடு' 'சுயராஜ்ஜியா' 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' முதலானது. வருமானத்தை நோக்கியது பல. அவைகளின் பெயரைச் சொன்னால், அவைகளுக்குச் சுருக்கென்று கோபம் வரும். தவிர எந்த நோக்கமுடைய பத்திரிகை யானாலும், தன் பெயருக்கேற்றபடி வியாசங்களையும் விஷயங்களையும் வழங்க வேண்டும். பட்சபாதத்தை நீக்கவேண்டும். புறங்கூறலை ஒழிக்கவேண்டும். சந்தாதாரர்களும் மற்றவர்களும் பத்திரிகையைப் படிப்பதால் ஞானமோ, உலக விஷயமோ, கல்வியோ இவைகளில் சிலவற்றை அடையவேண்டியதாயிருக்கவேண்டும். அதற்குப் பத்திராதிபர்கள், நன்றாய் கற்றுணர்ந்தவர்களாயும், உயர்குலத்தவர்களாயும், பொறுமையுடையவர்களாயும், உலக அநுபோக முடையவர்களாயும் இருத்தல் அவசியம். முக்கியமாய், பத்திராதிபர்கள் கல்வியாளர்களாயிருந்தால்தான் தமது பத்திரிகையின் பெயருக் கொத்த வழியில் நடத்த இயலும். அவ்வாறல்லாது வயிறு வளர்க்கும் நிமித்தம் கையெழுத்தையே மூன்று தப்பாக எழுதுபவர்கள் ஆசிரியராக விருந்து பத்திரிகை நடத்துவது எத்தன்மைத்தாயிருக்கும் என்பதை நேயர்கள் அறிக. உபமானமாக, ஆனந்த விகடன் என்கிற பெயருக்கு ஒக்க வியாசங்கள் விகடமானதாயிருந்தாலும் ஆபாசமாக உளறி, கற்றவர்களும், பெண்மக்கள் முதலானவர்கள் கையால் தொடாத வண்ணம் விகடம் எழுதினால் அது தெருசிரிக்கும் விகடமாகும். விகடம் என்றால் சாமானியர்கள் எழுதுவது அசாத்தியமாகும். மேலும் சிலர் தமது பத்திரிகையானது, தமது பகைவர்களையும், பணங்கொடாதவர்களையும் தூற்றும் ஆயுதமாகக் கொண்டுள்ளார்கள். அஃது மிகவும் குறைவாகும். தவிர, இதற்கு முன் பல விகடப்பேபர்களுக்கு நாம் வியாசம் எழுதி வந்தோம். அப்பத்திரிகைகள் நன்கு கல்வி ...

162386



வோடு நீண்டு நடைபெறாமையால் சென்திருச் சென்னையில் பிரபல வியாபாரியும், 'ஸ்ரீமத் பத்மநாபவிலாச' அச்சுக்கூடத் தலைவரும், வித்யாவதானிகளை ஆதரித்துப் போஷித்தவருமாகிய இட்டா. பார்த்தசாரதி நாயுடு அவர்களின் திருக்குமாரர்கள், இ. சக்கரபாணி நாயுடு, இ. கோவிந்தராஜலு நாயுடு அவர்கள்பால் அன்பு பாராட்டி "ஆனந்த விகடன்" என்னும் மகுடம் புனைந்து, மேற்படி இ. கோவிந்தராஜுலு நாயுடு அவர்களைப் பிரசுர கர்த்தாவாக வகித்து, அட்சயவாண்டு, மாசி திங்களிலிருந்து சஞ்சிகை ரஞ்சிதமாகக் குஞ்சரத்தின் திருவருளை முன்னிட்டு உலவுகின்றோம். சந்தா நேயர்கள் நமக்கு உற்சாகத்தைத் தளராது ஊட்டுவிப்பாராயின், விகடன் திருவுருவத்தை ஸ்ரீ விநாயகக் கடவுளின் திருப்படத்திற்குப் பின்னணியிற் காட்டுவதோடும் மாதாமாதம், சமயோசித சித்திரங்களும் குறிப்பிடப்படும்.

ஓம் விகடாய நம:

---

## விகடங்கள்.

### லட்சம் சாமான் இனாம்.

ஆகாயத்தில் தோன்றும் நட்சத்திரங்கள் இத்தனையென்றும், ஒவ்வொன்றும் இவ்வளவு எடையும் அளவும் உடையதென்றும் கூறும் நபர்களுக்கு லட்சம் வஸ்து இனாம் தரப்படும்.

சாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| அரைக்கீரை விதை | 35000 |
| கும்பகோணம் கொசு | 20000 |
| உபயோகப்படுத்தி கழித்துவிட்ட போனகிழப் ஊசி | 15000 |
| காலி சிகரட் பெட்டி | 10000 |
| முத்திரை அடித்த காலணா ஸ்டாம்பு | 20000 |
| ஆக சாமான் | 100000 |

ஷை சம்பந்தமாக கடிதம் எழுதவேண்டுமானால் விலாசம்.

வம்பன் கம்பெனி.

திம்மன்பட்டி

(வயா) கோம்மன் புரம்.

## அருமையான ஸ்டேஷன் மாஸ்டர்.

பட்டிக்காட்டுப் பிரயாணி ஒருவன் ஸ்டேஷன் மாஸ்டரை நோக்கி 'சார்' பத்தரை மணி வண்டி எப்போது வரும் என்றான். ஸ்டேஷன்மாஸ்டர் கைகாட்டிமரம் கைசாய்ந்தால் வரும் என்றாராம்.

## கொசுக்கடிக்கு.

இராக்காலத்தில் மனிதர்களின் தேகத்தில் கடிக்க கொசு உட்கார்ந்தவுடன் ஓர் துப்பாக்கியை எடுத்துக் கொசுவைச் சுட்டால் கொசு பறந்து போய்விடும். ஆசாமி ஆகாயம் சேர்வார். பின்பு அந்த தேகத்தை கொசு அண்டாது.

## ஜாலக்காரன் சமர்த்து.

இந்திரசாலம், மகேந்திரசாலம் செய்வேனென்று திரியும் ஒரு சிறு மை கிமிழை வர், ஒரு நாள் பலர்கூடியிருக்கும் சபையில், ஒரு சிறு பாணைக்குள் எடுத்துச் சூகலருக்கும் காட்டி, அன்பர்களே, இந்த சிறுபாணைக்குள் ஐயாயிரம் வஸ்துவை வரவழைத்துக்காட்டுகிறேன் என்று சொல்லி, சிறிது சாலம்செய்து கடைசியில் அந்தப்பாணையைத்திறந்து மேஜையின்மீது கொட்டினார். அதனுள் ஐயாயிரம் எள்ளு இருந்தன. அதை எண்ணிப்பாருங்கள், ஐயாயிரம் சரியாயிருக்கும் என்றாராம். இதுவும் ஓர் ஜாலமாகும்.

## டிரைவர், பெட்ரோல் இல்லாமல் ஓடக்கூடிய கார்கள்.

பெட்ரோல் எண்ணெய். டிரைவர் இல்லாமல் ஓடக்கூடிய கார்கள் சுவல்ப விலையில் கிடைக்கும் அதாவது "மோர்சக்கார்."

## கோடி கொசு சந்தர்ப்பணை.

புதிதாகப் பிறந்த அட்சய ஆண்டு கடைசி ஆண்டானபடியால், அடுத்துவரும் அட்சய ஆண்டுவரையில் விகடன் சரிவர உலவ வேண்டி தர்மத்தை முன்னிட்டு கோடி கொசுக்களுக்கு ஆகாரம் அளிக்க விகடன் எண்ணப்பட்டிருக்கிறான். ஆண்டிகட்கும், பார்ப் பனருக்கும் அன்னமளித்தால் அவர்கள் சோற்றையும் விழுங்கி விட்டு தட்சணையும் கேட்கிறார்கள். தட்சணை கொடுத்தால் அப் பணத்தைக்கொண்டு கஞ்சா, சிட்டா, சூது, சீட்டு முதலியவற் றிற்கு உபயோகப்படுத்துவதால், அதை நிறுத்தி பறவை, மிருகங் கட்கு சந்தர்ப்பணை செய்தால் நலமென்று விகடனுக்கு விகட குரு போதித்தார். அப்படியே செய்யப்போவதால், அன்பர்கள் அவரவர்களுக்கு தென்படும் கொசுக்களிடம் சேதி சொல்லி விகடன் ஆசிக்கு அனுப்பவும். இஷ்டமுள்ளவர்கள், ஆகார உதவியும் புரியலாம். அதற்காக வஸ்துக்கள் அனுப்புகிறவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.

விலாசம் :—ஆண்டிகள், பார்ப்பனர் அல்லாத
பிராணிகள் நிலையம், நிர்மாணுடபுரம்.



## கோயில் சோறு.

கோயில் சோற்றை பணங்கொடுத்து வாங்கி உண்ட ஓர் பரதேசி விற்றவனைக் கண்டு என்ன ஐயா, சமையற்காரரே! சுவாமிக்கு நிவேதனம் செய்யும் அன்னத்தில் பாதிக்கு மேல் கல்லாயிருக்கிறதே? அது கடவுளுக்கு ஏற்குமாவென்று கேட்டான். அதற்குச் சுயம்பாகி, அடா பரதேசி! சோற்றில் அரைப் பாகம் கல் என்கிறாயே, சுவாமி முழுப்பாகம் கல்லாயிற்றே அதை அறியாயோ வென்றானும். பரதேசி, பறந்தான்.

## ஓட்டுக் கேட்பவர்.

ஒரு சிறு கிராமத்தில் கூரைகளுக்கு வேயும் ஓடு வியாபாரம் செய்பவரிடம் ஓர் அபேட்சகர் சென்று, "ஐயா! உமது வோட்டை யாருக்குக் கொடுக்கப்போகிறீர்" என்று கேட்டார். அதற்கு அவ்வியாபாரி, ஐயா! நேற்று ஒருவர் வந்து ஆயிரம் நாலேகால் ரூபாயிக்குக் கேட்டார். தங்களுக்கு வேண்டுமானால் அதிகம் காலணுகொடுத்தால் தருகிறேன் என்றானும்.

## மற்றொரு ஓட்டர்.

ஒரு குடியானவன் வீடுகட்ட ஓட்டுச் சூளைபோட்டு வைத்திருந்தான். அதை அவ்வூரிலுள்ள மற்றொரு சமுசாரி, அந்த ஓட்டை எனக்குக்கொடு. நான் பின்பு உனக்கு வேறு ஓடு கொளுத்திக் கொடுக்கிறேன் என்று கேட்டான். அதற்கு, ஓட்டுக்குச் சொந்தக்காரன் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டான். கேட்டவன் சரிதானென்று போய்விட்டான். பின்பு நான்குநாள்பொறுத்து அந்த ஜில்லா அபேட்சகன் ஒருவர், ஷெ ஓட்டுக்காரனுக்கு ஒரு வேண்டுகோள், விண்ணப்பக் கடிதம் அனுப்பியிருந்தார். அதில், "ஐயா தயவுசெய்து தங்கள் ஓட்டை எனக்குக் கொடுங்கள்" என்றிருந்தது. அக்கடிதத்தைப் பார்த்ததும் ஓட்டுச்சூளை வைத்திருக்கும் ஆசாமிக்குக் கோபம் பொங்கிவிட்டது. இந்த கலகம், நம்மை ஓடு கேட்டு நாம் கொடுக்கமாட்டேன் என்று சொன்னோமே அவனே செய்திருப்பான் என்று, அவன் வீட்டிற்குச் சென்று அவனிடம் சண்டையிட்டானும்.

இவ்வாறனவர்களிடம் ஓட் பெறுவதானல், அபேட்சகர்கள் பாடு எவ்வளவு நெருக்கடியான நிலைமை என்று உணர்வீர்களாக.

## உத்தம மனைவி.

ஒருவீட்டில் புருடனுக்கும், பெண்சாதிக்கும் சண்டை உண்டாயிற்று; பெண்சாதி கோபித்துக்கொண்டு குளத்தில் விழுந்து சாகிறேன் பார் என்று குளத்திற்கு ஓடினள். புருடனும் பின்னலே போனன். மனைவி குளக்கரையில் நின்றுகொண்டிருந்தாள். "என்னடி குளத்தில் விழுகிறேன் என்றுவந்து, சும்மாநிற்கிறாயே"

என்றான் கணவன். அதற்கு மனைவி, குளிராக விருக்கிறது பொழுது விடிந்து சூரியன் புறப்பட்டபின் சாகிறேன் என்றாளாம்.

### ள-வுக்கு-ழ.

தஞ்சாவூரிலிருந்து சென்னைக்குப்போயிருந்த ஒருவன் ஓர் கடையிற் சென்று ஒரு அணாவுக்கு வாளப்பளம் கொடு என்றான். அதைக்கேட்ட கடைக்காரன், ஐயா நீ தெற்கத்தியான்போல் இருக்கிறது. வாளப்பளம், கிளப்பளம் என்று இங்கு பேசாதேயும். ளானாவுக்கு ழானாபோட்டு பேசும் என்றான். தஞ்சாவூரான் சரி, வாழைப்பழம் தாவென்றான். கடைக்காரன் சரி அப்படிசொல், பின்னும் என்னவேண்டும் என்றான். காலணாவுக்கு, புழிதா ? காலணாவுக்கு முழகா தா ? வென்றான். பார்த்தான் கடைக்காரன், இதேது புதுமையாயிருக்கிறது என்று நகைத்தானாம்.

### ஓர் புத்திசாலி.

திருப்பதிக்குப்போய், சுவாமிதரிசனம் செய்துவந்தவர்களைக் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்துக்கொண்டால் திருப்பதிக்குப் போய்வந்த புண்ணியம் கிடைக்கும் என்று ஒருபக்தர் உபந்நியாசம் செய்தார். அதைக்கேட்ட ஒரு மூடன், சிலநாள்பொறுத்து சென்னையில் மூர்மார்க்கட்டில் இரண்டுபேர் புருஷனும், பெண்சாதியுமாக இளவயதுடையவர்கள் வந்தார்கள். அச்சமயத்தில், ' அம்மூடன் அவர்களை எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டான். மனைவி திருப்பதிக்குப் போய்வருகிறோம் என்றாள். உடனே அம்மூடன் அந்தப்பெண்ணைச்சேர்த்து மார்புற ஆலிங்கனம்செய்தான். அதைக் கண்ட மற்றையர், என்னடாபாவி இப்படிச்செய்தாயே என்றதற்கு உபந்நியாசத்தின் விபரத்தைக் கூறினானாம்.

### ஜோசியம்.

தெருவில் போய்க்கொண்டிருந்த அன்னியன் ஒருவனை தெருத் திண்ணையில் உட்கார்ந்துக்கொண்டிருந்த ஒருவன் பார்த்து, அடே திம்மப்பா ! இங்குவாவென்றார். அதற்கு அன்னியன் என் பெயர் உமக்கெப்படித் தெரியும் என்றார். உன் முகத்தைப் பார்க்கும் போதே அறிந்துகொண்டேனென்று உத்தாரம் சொன்னாராம்.

### தொப்பி வேண்டுமாம்.

நம் நாட்டு மாதர்கள் வெளியில் போகநேர்ந்தால், மிதியடி குடை இவைகளை உபயோகித்தல் நலமெனச் சிலர் கூறுகின்றனர். அதைவிட தலையணியாக தொப்பிகள் அணிந்து கொண்டால் நலமென விகடன் கூறுகிறானாம்.

### பிரசங்கம் கேட்டதின் பயன்.

ஓர் அரசன் ஒரு பாகவதரைக்கொண்டு, பாகவதப்பிரசங்கம் செய்யச்சொல்லி நான்குமாதம் கேட்டு பட்டாபிஷேகம் செய்தான்.



பாகவதம் கேட்டகாலத்தில் கிருஷ்ணபகவான் அநேக ஆயிரம் கோபிகாஸ்திரீகளுடன் கிரீடி செய்துவந்தார் என்று அறிந்தான். தன்போன்ற அரசன் ஆயிரக்கணக்கான ஸ்திரீகளை அநுபவிக்க, நாம்மட்டில் ஓர் மனைவியுடன் இருப்பது பெருமை அல்லவென்று எண்ணி பல பெண்களை வைப்பாக வைத்துக்கொண்டான். இதை அறிந்த அரசன் மனைவி, நாயகனை இவ்வாறு செய்யலாமா வென்று கேட்டாள். அதற்கு அரசன், நான் பாகவதம் கேட்டேன் ; அதில் கிருஷ்ணன் என்னைப்போல் அநேகம் அநேகம் மனைவிகளை வைத்திருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் மட்டில் ஒருத்தியுடனிருக்கிறதா வென்றான். மனைவி எவ்வளவோ புத்திமதிகளைச் சொல்லியும் கேட்கவில்லை. பின்பு, ஆறு மாதம் பொறுத்து மனைவி பாரதம் படிக்கச்சொல்லிப் பட்டாபிஷேகம் செய்தவுடன், நாயகனிடம் சென்று நாதா ! நான் பாரதம் கேட்டேன். அதில் என் போன்ற ஓர் அரசன் மகள் பாஞ்சாலி, ஐந்து கணவர்களை மணந்திருக்க, நான் மட்டில் ஒரே நாயகனோடு இருப்பது அழகல்ல. ஆதலால், எனக்கும் தங்களைப்போல ஏற்பாடு செய்யுங்கள் என்றாள். அரசன் வெட்கி தனது வைப்பாட்டிகளை யெல்லாம் பென்ஷன் கொடுத்து அனுப்பிவிட்டானாம்.

### க. கா. கி. கீ. கு. கூ. கூளையப்பன்.

ஒரு வியாபாரியினிடம் குமாஸ்தா வேலை பார்க்க ஒருவன் வந்தான். அவ்வியாபாரி, அவனை வேலையில் அமர்த்திக்கொண்டான். அக் குமாஸ்தாவை உன் பெயர் என்னவென்று வியாபாரி கேட்டான். அதற்கு, என் பெயர், க. கா. கி. கீ. கு. கூ. கூளையப்பன் என்றான். அதைக் கேட்ட வியாபாரி திடுக்கிட்டு, என்ன அப்பா ! உன் விலாசம் கார்டில் அடங்காதுபோலிருக்கிறதே ? நீ என்ன செட்டிப் பிள்ளையோ வென்றான். பையன், ஐயா ! நான் செட்டிப் பிள்ளை அல்ல. என் தாயார் செட்டி வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தாள் என்றானாம்.

### கூர்மை மதியுள்ள பிரபு.

சென்னையில் ஓர் பிரபு தனது குமாரனுக்கு நடக்கும் கலியாணத்திற்காக, தஞ்சாவூரிலிருந்து ஓர் நாகசுரக்காரனை வரவழைத்தார். நாகசுரக்காரன் இரண்டுநாள் முன்னதாகவே சென்னைக்கு வந்து விட்டான். அப்போது, சென்னை கந்தசாமி கோயில் உற்சவமானதால், தஞ்சாவூர் நாகசுரக்காரனை ஓர் நாள் வாசிக்கும்படி. வேறு சிலர் கேட்டுக்கொண்டார்கள். அப்படியே வாசித்தான். அப்போது அங்கிருந்த சிலர் அடடா ! பலே பேஷ், வாத்தியக்காரன் கெட்டிக்காரன். சாரீ வாசிக்கையில் பலபல வென்று சாரியை உதிர்த்தான் என்றார்கள். அதைக் கேட்ட ஒருவன் போய், வாத்தியக்காரனை வரவழைத்த பிரபுவினிடம் பார்த்தான். சரி

வாத்தியக்காரனைக் கூப்பிட்டு அவனிடமிருந்த நாகசுரத்தை வாங்கி உள்பக்கம் பார்த்தான். அதனுள் ஒன்றும் இல்லை. காலியாயிருந்தது. பிரபுவுக்கு கோபம் வந்து அடே, வாத்தியக்காரா கந்தசாமி கோவில் உற்சவத்தில் எல்லாப் பாட்டுகளையும் பலபலவென்று ஊதித்துவிட்டு காலி நாகசுரத்தையா வைத்திருக்கிறாய்? நீ வேண்டாம் கலியாணத்திற்கு என்று அனுப்பிவிட்டாராம்.

## பக்காத்திருடன்

கரூரில் கள்ளனொருவன் குடியிருந்தான். அவனொரு நாள், ஒருவன் வீட்டில் புகுந்து சாப்பிடும் வெங்கலக் கிண்ணியைத் திருடிக் கொண்டுபோய் வைத்துக்கொண்டு, அதை ஒருவர்க்கும் தெரியாமல் ஜாக்கிரதையாக வைத்திருந்தான். குன்னத்தூரிலிருந்து குள்ளன் என்னும் அவனுடைய பந்து வந்திருந்தான். குள்ளனைக் கண்ட கள்ளன், இவன், இன்றிரவு நமது கிண்ணியைத் திருடிப் போய்விடுவானென்று யோசனைசெய்து இராத்திரியில் படுக்கும் போது, கிண்ணி நிறைய ஜலத்தை வார்த்துத் தனது மார்பின்மீது வைத்துக்கொண்டு அயர்ந்து தூங்கினான். குள்ளன் மெள்ள வெழுந்து பார்த்தான். கள்ளன் மார்பின்மே லிருக்கும் கிண்ணியைத் தொட்டால் அசைந்து தண்ணீர் ததும்பிக் கீழே கொட்டும், உடனே விழித்துக் கொள்வானென்று, ஓர் சிறிய குழாயை வைத்துத் தண்ணீர் முழுவதையும் வாயால் உறிஞ்சிக் குடித்துவிட்டுச் சுலபமாகக் கிண்ணியை யெடுத்துக்கொண்டு குள்ளன் ஓடிவிட்டான்.

## உரையறியாது உளரல்

சண்டையிலும்கூட சாஸ்திரமுண்டோ? ஒருவன் புண்ணுக்குச் சென்னியென்றான். மற்றவன் போக்கிரிப் பழனியென்றான். இதனால் ஒருவர்க்கொருவர் போராடிக் குடுமிக் கலியாணம் செய்துகொண்டார்கள். ஏன் இடுகுறிப் பெயரும் காரணப் பெயரானது? சென்னி மலையில் புண்ணுக்குச் சித்தர் ஒருவர் இருந்தார். அதனால் புண்ணுக்குச் சென்னியென்று சொல்வார்கள். பழனி மலையில் போகர் வசித்திருந்தார் அதனால், போகர் கிரியென்பதற்குப் போ—கிரி = போக்கிரிப் பழனியென்று சொல்வார்கள். இதனால் நீங்கள் கோபங் கொள்ளலாமா?

## சர்க்கரைத் திருடன்

ஒரு வீட்டிலோர் பானையில் சர்க்கரை வைத்திருந்தது. அவ்வீட்டிலோர் பையன் வெளியே வரும்போதும், உள்ளே போகும்போதும் ஒருவருக்கும் தெரியாமல் சர்க்கரையை அள்ளி வாயில் கொட்டிக் கொள்வது வழக்கம். பானையில் சர்க்கரை குறைந்து விட்டது. இவனுடைய தாயார் சர்க்கரை குறைந்திருப்பதைப் பார்த்து தம் மக்கள் அனைவரையும் விசாரித்தாள். ஒருவனாவது உண்மை சொல்லவில்லை. உடனே தாயார் பல நாள்



திருடன் ஒருநாள் பிடிபடுவானென்று சர்க்கரையை வேறு பானையில் கொட்டி வைத்துக்கொண்டு, அதே பானையில் மிளகாய்த் தூளைப் போட்டு வைத்திருந்தாள். இது அறியாத திருட்டுப் பையன் வெகு அவசரமாக ஓடி ஒரு பிடி மிளகாய்த் தூளை வாய் நிறையக் கொட்டிக் கொண்டான். ஐயோ பாவம்! மிளகாய்த் தன் வீரத்தைப் பையனிடம் காட்டிவிட்டது. பையன் கண்ணீர்விட்டு ஆ! ஊ! ஆ! ஊ! வென்று அலறிக் கத்தினான். தாயார் திருடனைப் பிடித்து நையப் புடைத்து இனிமேல் உண்மை பேசும்படி கற்பித்தாள்.

## மதத்துவேஷம்

ஒரு வைணவனும், ஒரு சைவனும் ஒரு சத்திரத்தில் சந்தித்தார்கள். அவ்விடத்தில் ஒரு குழந்தை மலங்கழித்தது. இதைப் பார்த்ததும் வைணவன் சைவனை இகழ்ச்சியாக வெண்ணி, என்ன ஓய்! மலத்தைச் சிவ பஸ்பத்தைப் போட்டு மறையும், மறையும். நாற்றம் மூக்கைத் துளைக்கிறது என்றான். அதற்குச் சைவன், உடனே என்ன ஓய் நமது வராகமூர்த்தி (பன்றி) வந்தால் சாப்பிடட்டுமென்றான்.

5. ஒரு பிரபு, தினந் தினம் பலகார பக்ஷணங்களோடு புசிப்பான். அவ்வீட்டுக் கருகே ஒரு ஏழை இருந்தான். ஆனால், வெகு தந்திரசாலி. தன் மனைவியிடம் பல யுக்திகள் கற்றுக் கொடுத்திருந்தான் அவளும் பல வீட்டுக்கும் தெரியும்படி தாளிப்பதும், தன் புருஷனுக்குப் பால், பழம், சர்க்கரை உபயோகித்து வருவதாக வெளியில் காட்டிக் கொள்வது வழக்கம் (அந்த யுக்திகளாவது, காண்டிக் காம்பைக் காய்ச்சி ஜலத்தில் தொய்யென்று விடுவாள், பால் என்பது சோற்று நீர், பழமென்பது மிளகாப்பழம், சர்க்கரையென்பது உப்புச் சர்க்கரை யென்பது பொருள்).

6. ஒரு கழுதை தன் பின்னங்காலி லொன்றில் முள் பட்டு அதனால், நிலத்தில் கால் ஊன்ற முடியாமல் தூக்கிக் கொண்டேயிருந்தது. ஜீவகாருண்யமுள்ள ஒட்டன் கண்டு, ஐயோ பாவம்! இந்த முள்ளை யெடுத்தெறிந்தால் நமக்கு நிறையப் புண்ணியங் கிடைக்குமென்று அதன் பின்பக்கம் மண்டியிட்டு உட்கார்ந்து வெடுக்கென்று முள்ளைப் பிடுங்கினான். உடனே கழுதை ஒட்டன் முகத்தில் பட்டென்று உதைத்தது. ஐயோ பாவம், பல்லெல்லா முதிர்த்தும், உதடும், மூக்கும் கிழிந்து இரத்தம் பெருகிவிட்டது.

(தொடரும்)

"ஆஸ்ய பாஷ்யன்", கரூர்.

## விகட சம்பாஷணைகள்.

---

போஸ்ட்மேன் :—ஓய் ஆசாரி! உமக்கு ஓர் வி. பி. தபால் வந்திருக்கிறது. பணம் கொடுத்து வாங்கிக் கொள்ளும் ?

ஆசாரி :—எனக்கு வேண்டாம், திருப்பிவிடு.

போஸ்ட்மேன் :—என்ன ஐயா! அப்போது எழுதிவிட்டு இப்போது திருப்பிவிடுகிறீரே இது மோசம் அல்லவா ?

ஆசாரி :—நான் செய்யும் மோசங்களில் இது எவ்வளவு! என் அநுபவம் உனக்குத் தெரியாதோ ?

---

ஓய் விகடரே! உம்மிடம் ஆர்டர்கொடுத்தவர்கள் எல்லாம் வி. பியை பணங்கட்டி வாங்கிவிட்டார்களா? நாமம்போட்டார்களா?

விகடன் :—அநேகமாய் எல்லாரும் வாங்கிவிட்டார்கள். சில...தான் திருப்பிவிட்டார்கள். அந்த உத்தமர்கள் பெயரை வேண்டுமானல், அடுத்த மாதம் விவரமாக விலாசப்படி ஒப்புவிக்கிறேன். அப்போது சிரியுங்கள்.

ஆறுமுகன் :—ஐயா! மடாதிபதி சுவாமியாரே? ஓர் பேபர் வரவழைத்தால் உலக அநுபவங்கள் விளங்குமே என்று வரவழைக்கிறதுதானே ?

சுவாமிகள் :—நமது ஆச்சிரமத்திற்கு பேபர் பார்ப்பது அழகல்ல. சாஸ்திரங்கள் படித்தால் நலம். ஆனல் அதற்கு வாசிப்பு வேண்டும். அதுதான் நம்மிடம் 000000.

ஆறுமுகம் :—உங்கள் ஆச்சிரமத்திற்கு பேபர் பார்க்கக் கூடாது மெய்தான். பேபர் பார்க்கலாமா? அது எந்த சாஸ்திரத்தில் கூறுகிறது ?

சுவாமிகள் :—பேபரைக் கையாளாத மகான்கள், மரப்பொம்மைகள் ஆவார்கள் என்று மடைய புராணம் கூறுகிறது.

---

வரதன் :—ஐயா பத்திராதிபரே ? உமது பேபரில் கண்டிருக்கிற "தத்துவம்" என்கிற வியாசத்தின் சாரமென்ன ?

ப—ர் :—என்னையா கேட்கிறீர்? கூலிகொடுத்து, ஆள்வைத்து, வியாசம் எழுதி வாங்கி நான் பிரசுரிக்கிறது. எனக்கு அதுவொன்றும் தெரியாது.

வரதன் :—பலே பேஷ்! நல்ல பத்திராதிபர் கூலிக்கு எழுதும் பத்திரிகை நன்றாய் நடக்கும்.

---



ஓட்டர் :—ஐயா அபேட்சகரே! என்னை ஓட் கேட்கிறீரே நான் எப்படித் தருகிறது ?

அபேட்சன் :—நாளைய தினம் ஓர் சீட்டு உன்னிடம் கொடுப்பார்கள். அதில் என் பெயருக்கு நேரே X இந்த மாதிரி மார்க்கு செய்துவிடு.

ஓட்டர் :—உமது பெயரென்ன ?

அபேட்சகன் :—அந்தச் சீட்டிலேயே என் பெயர் எழுதியிருக்கும்.

ஓட்டர் :—இவ்வளவு புத்தி கூர்மையுள்ள நீ எங்களுக்கு என்ன நன்மை செய்யப்போகிறயோ தெரியவில்லை. தெண்ட எழவுக்கும், நிர்ப்பந்தத்திற்குந்தான் தரவேண்டும்.

---

சாப்பிட வந்தவன் :—ஐயா! இந்த உபயோகமற்ற சோற்றிற்கா காலே மூணு வீச அரை வீசம் ரூபாய் வாங்குகிறயே ? அந்தப் பணத்தை எங்கே கொண்டுபோய் போடுவீர் ?

ஓட்டல்காரன் :—அடபோ! இந்த வருமானம் பற்றமல் எங்கள் வீட்டுப் பெண்டுகள் பல மாதிரி வருமானம் பார்க்கிறர்கள்.

---

யாசகன் :—ஆச்சி! உங்கள் புருஷன் நல்ல தருமவானமே? எனக்கு ஒரு வேஷ்டி வாங்கிக்கொடுக்கும்படி சொல்லுங்கள் ?

ஆச்சி :—என் புருஷன் தருமவான்தான். முன்பு எல்லாம் தான தருமம் செய்துவந்தார். இப்போது புதிதாக ஏஜண்டையர் வந்திருக்கிறர். அவர் பழைய தருமங்களையும், புது தருமங்களையும் மட்டுப்படுத்திவிட்டார். தன் தொப்பையை மாத்திரம் நிரப்பிக்கொள்கிறர். ஆதலால், அந்தப் பாவி ஒழியுமட்டும் நீ வராதே.

---

## விகடக் கதை

### புது வீடு கட்டிய பிரபு.

தையூர் என்கிற ஊரிலே ஓர் பிரபு யிருந்தார். அவர் மகா பக்கர். ஓர் காசும் தானம் செய்யமாட்டார். அவர் சுமார் லட்சம் ரூபாய் செலவு செய்து ஓர் வீடு கட்டினர். கிரகப் பிரவேசம் நடந்து சுமார் ஒரு மாதம் ஆச்சுது. ஓர் நாள் பிரபு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருக்கையில், அடுத்த ஊரிலிருந்து ஓர் கவிராயன், ஒடி. பிரபுவின்மீது ஓர் பாடல்பாடி, அதை தன் மகனிடம்

ந்து இதை பிரபுவிடம் தந்தால் சன்மானம் தருவார். அதைப் பெற்றுக் கொண்டு வா? உனக்கும் நல்ல விருந்து செய்வார் என்று அனுப்பினான். கவிராயன் மகன், வெகு சந்தோஷமாய் அந்த பாட்டைக் கொண்டுவந்து திண்ணையில் உட்கார்ந்திருந்த பிரபுவினிடம் கொடுத்தான். அந்த கவியை வாங்கிப் பார்த்துவிட்டு, பையனைப் பார்த்து, அப்பா கவிராயர் மகனே! நீ போன மாதம் வந்திருக்கப் படாதா? நான் வீடு கட்டி கிரகப் பிரவேசம் செய்தேன், இதோ பார் வீட்டின் அழகை என்று எழுந்து பையனை அழைத்துக் கொண்டு போய் தாம் கட்டிய புது வீட்டின் அலங்காரங்களை யெல்லாம் பொறுமையோடு ஒவ்வொரு பாகமாக இது ஆபீஸ் செய்யும் இடம், இது கச்சேரி மண்டபம், இது விருந்தினர் மண்டபம், இது சீட்டாடும் கொட்டடி, இது களியாட்ட அறை, இது ஸ்டோர் ரூம், இது மோட்டார் சாமான்கள் வைக்கும் அறை, இது கஜானா அறை என்று இன்னும் பலவிதமாகக் காட்டிக் காட்டி மணி பகல் பன்னிரண்டு வரையில் ஜாலம் செய்தார். பையன்பாடு பசி தாங்க முடியவில்லை. பரிசு தராவிட்டாலும், விட்டால் போதும் என்று தோன்றிற்று. தாகமோ நாவை வறட்டுகிறது. கண்டஞ் சடைகின்றது என் செய்வான் புலவரின் மகன். ஒன்றும் சொல்லச் சரிப்படவில்லை. அச் சமயத்தில் பிரபு, ஓர் அறையைத் திறந்து காட்டி, அப்பா! இதுதான் நான் படுக்கும் அறை என்றார். அந்த அறையோ திறந்தவுடன் பல வாசனைகள் கமகமவென்று வெளி விட்டது. பல அழகிய படங்களும், விசைக் கட்டில்களும், பீரோ நாற்காலிகளும், நிலைக் கண்ணாடிகளும் மலிந்து கிடந்தது. பார்த்தான் பையன், அந்த சமயம் மணியும் ஒன்றடித்துவிட்டது. பிரபுவைப் பார்த்து, ஐயா! ஒரு சந்தேகம். அதாவது, உமது படுக்கை அறையை இந்த ஏழாவது கட்டில் வைத்திருக்கிறீரே? ஒரு வேளை நீர் செத்துப்போனால், இத்தனை முகப்பையும் தாண்டியா பிணத்தை எடுத்துக்கொண்டு போகிறது என்றான். இதைக் கேட்ட பிரபுவுக்கு கண்கள் சிவந்தன, கோபம் பொங்கிற்று. அடா! நாம் புதிதாய் வீடு கட்டினதைக் காட்டினால் அவசகுனமாக நமக்குச் சாவு கோருகிறானே என்று பையனைக் கடிந்து துரத்திவிட்டார். பையன் சொந்த வீடுவந்து சேர்ந்தனன். தகப்பனிடம் சேதியைச் சொன்னான். தகப்பன் பையனைக் கோபித்துக்கொண்டு மறுதினம் தானே பிரபுவிடம் சென்றான். அந்தப் பிரபு மறுதினம் போன கிழப் புலவரையும் அவ்விதமே செய்து, கடைசியில் படுக்கை அறையைக் காட்டும்போது நேற்று பையன் சொன்னதைத் தகப்பனிடம் சொன்னான். அதற்குப் புலவர், பிரபுவே, தாங்கள் கோபிக்க வேண்டாம். பையன் சிறியவன்; அவனுக்கு யோசனை தெரியாது. அப்படி உங்களுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் இத்தனை வாசற்படி தாண்டி எடுத்துக் கொண்டு போவானேன். படுக்கை அறையின் மேலண்டை சுவற்றை இடித்து அந்த வழியாய் பின் தெருவே பிணத்தைத் தூக்



கிக்கொண்டு போகலாம் என்றார். அதைக் கேட்ட பிரபு, அடா! இவன் மகன் நமக்கு மட்டில் சாவு கோரினான். இவனோ நம்முடன் வீட்டிற்கும் அழிவு கூறினான். இதெல்லாம் புலவர்களைக் காக்க வைத்ததின் பயனென்று உணர்ந்து புலவர்க்கு பரிசு தந்து அனுப்பினானாம்.

---

## விகடப் பாட்டுகள்

(சந்தமா ரகிலொடு-என்ற மெட்டு)

முக்கனி யின்சுவை மொழிதரு கணிகையர்
தக்கனற் பணிபல தாங்கிய தருணிகள்
பக்கலி லமர்ந்திடும் பாக்கியந் தாவென
இக்கலி விகடனை ஏத்தியே போற்றுவீர்.

(நீள நினைந்தடியேன்-என்ற மெட்டு)

நத்துடன் கம்மலணி—நல நாரிகள் மருங்கணைந்து
முத்தொரு வைரமணி யுடன்—முகில்நிற பட்டுசேலை
நித்தியமே யளித்து அவர்—நீழலி லிருப்பவர்க்கு
முத்தியெனும் பதவி தரும்—முக்கணுடைப் பெருமான்..

(இக் காலக்கண்ணி)

இப்பாரில் மக்கள்மனை—இல்லமெலாம் நான்துறந்து
செப்பார் தனத்தாரை—சேர்ந்திருப்ப திக்காலம்.

உத்தமர்கள் பாவலர்கள்—ஊரிலுள்ள மற்றையர்கள்
எத்தினமும் தூஷிக்க—இருந்தொளிர்வ திக்காலம்.

பாலவர்க்குக் கூலிதந்து—பாக்கள்பல எழுதசொலி
நாவலர்போல் தன்பெயரை—நாட்டுவது இக்காலம்.

முதலாளி வீடுகளின்—முற்றத்தி லுறுங்கூலி
மதப்பேய்கள் யாசகரை—மறிப்பதுவும் இக்காலம்.

பத்திரிகை அனுப்பென்று—பகட்டாகச் சொல்லிவிட்டு
பத்திரிகைத் தபால்வந்தால்—பதுங்குவதும் இக்காலம்.

அன்னியர்க்குப் பெருமைவந்தால்—ஐயோவென் றலறி
இன்னிலத்தில் உத்தமரை—தூற்றுவது இக்காலம்.

கையெழுத்துப் போடவகை—கல்லாத மூடரெல்லாம்
மெய்க்காவி மணிபூண்டு—மிளிருவது இக்காலம்.

தனவணிகர் பால்பெற்ற—தட்சணை பூரிப்பணத்தை
தனமுடைய வேசிகட்கு—தந்திடுவ திக்காலம்.

நாளுக்கொரு மடத்தில்—நன்றாய்ப் புசித்துவிட்டு
ஆளுக்கொரு மாதை—அணைந்திருப்ப திக்காலம்.

இத்தகைய தீமையெலாம்—இன்னாட்டி லில்லாமல்
சுத்தமா யோடோடி—சுகம்பெறுவ தெக்காலம்.

---

(அதமர் நீதி)

காப்பு.

அதமர்கள் நீதியினை—ஆனந்த விகடன்சொல
இதமுடைய ஐங்கரனே—ஈகுவாய் நன்மதியை.

நூல்.

அன்னை தந்தையைப் பணிவோன் அதமனாகும்
ஆத்தாளைப் போஷிப்போர் அதமனாகும்
இல்லறத்தை நடத்துபவன் ஈனனாகும்
ஈயாத லோபிகட்கே ஈதல்வேண்டும்
உத்தமர்க்கு ஓர்காசும் உதவலாகா
ஊர்பணத்தை வஞ்சனையால் உரியல்வேண்டும்
எக்காலும் பொய்யுரைத்து இயங்கல்நீதி
ஏற்றமுள கலைபயிலல் என்றும்தீது
ஐயமென்று வருவாரை அலட்டல் நன்று
ஒருவரையும் நம்பிமெய்யை உரைக்கலாகா
ஓதுநல புலவர்களை ஓட்டவேண்டும்
ஔவியமே பெருமைதனை அளிக்கும் குணமாம்
அஃகமதை அணிந்திடுவார் அசடராவர்
நித்தமொரு மதச்சார்பில் நிற்கவேண்டும்
நீசர்தமை உத்தமராய் நினைக்கவேண்டும்
பூதிமணி காவியினைப் போற்றவேண்டாம்
புலால்களை யுண்ணுதற்கு மறக்கவேண்டாம்
காளிக்குக் கோழிரத்தம் காட்டவேண்டும்
கனந்தமகான் போலவேடம் காட்டவேண்டும்
ஆனந்த விகடனையே ஆதரிக்கும்
அன்புடைய உத்தமர்கள் வாழ்க வாழ்க.

---



## சீக்குண்டாம்.

(95-ம் பக்கத் தொடர்ச்சி)

வெண்பா.

சீசாபி ராந்தியுண்டால் சீக்குண்டாம் ஆதலினால்
நீசாரு மட்டும் நினையாதே—கூசாது
கள்ளுண்போன் நாய்க்கும் கடையாவா னென்பதற்கு
எள்ளளவும் சந்தேக மில்லை.

கோடிதனம் தந்தாலும் கோலவிழி மாதர்மனம்
நாடிநமைப் பற்றாது நானுரைப்பேன்—தாடிவெள்ளை
ஆனவரும் நாமத்தால் அல்லல் படுதலுண்மை
மோனமதே முத்திதரும் முன்பு.

வாணருக்கு நல்குவதாய் வாக்களித்த பின்புபல
கோணலுரை கூறுவது கோலமல்ல—வீணர்களே
அவ்வா றுரைப்பார்க்கு அப்போதே சீக்குண்டாம்
ஒவ்வாது அந்தகுணம் ஓது.

கற்றவரைத் தூற்றும் கசடர்குலம் வேரறுந்து
முற்றும் ஒழிந்திடுவார் மூதுலகில்—சற்றேனும்
ஈசன் அருளின்றி ஈரேழ் பிறவியிலும்
நாசமுறு வாரவர்கள் நாடு.

பொய்யும் பொறாமையுமே பூணாகக் கொண்டுழல்வோர்
மெய்யும் பலநோயால் நாசமுறும்—கையினிலே
ஓர்காசும் இன்றி ஒருநாய்போ லே திரிந்து
சீர்குலைவர் உண்மையிது செப்பு.

---

## விகட அகில நீதி.

(எருக்கந்தூர் சூலை காலைமுனி எழுதியது.)

(97-ம் பக்கத் தொடர்ச்சி)

வெறுத்தாலும் மனையாளை வெறுக்க வேண்டும்
வெள்ளாட்டி மகனெனவே விளங்க வேண்டும்
பொறுத்தாலும் வேசியர் சொல் பொறுக்க வேண்டும்
பொல்லாத வம்பனென்ற கீர்த்தி வேண்டும்
சிறுத்தாலும் சோம்பனெனச் சிறுக்க வேண்டும்
திருவீதி யெச்சிலுண்டு திரிய வேண்டும்
அறுத்தாலும் தாலிகளை அறுக்க வேண்டும்
அகிம்சா அகிலநீதி அன்பு தானே. (5)

தூற்றினும் பாவலரை தூற்ற வேண்டும்
துணைவந்த சகாயர்களை வருத்த வேண்டும்
சாற்றினும் பட்டைநாமம் சாற்ற வேண்டும்
சாராயம் கள்ளுண்டு ஆட வேண்டும்
ஏற்றினும் மடபதிபோல் ஏற்ற வேண்டும்
ஏமாந்தால் கைம்பெண்ணைக் கவரல் வேண்டும்
ஆற்றினும் டீகாப்பி யாற்ற வேண்டும்
அகிம்சா அகிலநீதி அன்பு தானே. (6)

நடந்தாலும் ஜனநெருக்கில் நடக்க வேண்டும்
நாடுமுன் கத்தரிக்கோல் போட வேண்டும்
கடந்தாலும் பிணங்குநெட்டால் கடக்க வேண்டும்
கஞ்சிக்கும் காற்றாகப் பறக்க வேண்டும்
கிடந்தாலும் மௌனிபோல் கிடக்க வேண்டும்
கிளம்பினால் ஜடைப்போட்டுக் கிளம்ப வேண்டும்
அடர்ந்தாலும் தாசிபதம் அடைய வேண்டும்
அகிம்சா அகிலநீதி அன்பு தானே. (7)

உருட்டினும் ஊர்பொருளை யுருட்ட வேண்டும்
உருத்ராட்ச பூனைபோல் உரும வேண்டும்
மருட்டினும் சிறுவர்களை மருட்ட வேண்டும்
மணிபரித்துக் கழுத்ததனை முறிக்க வேண்டும்
வெருட்டினும் ஜங்கமரை வெருட்ட வேண்டும்
வேதாந்தம் தெரிந்தவன்போல் பேச வேண்டும்
அருட்டிலும் விருத்தர்களை அலட்ட வேண்டும்
அகிம்சா அகிலநீதி அன்பு தானே. (8)

தள்ளாத விருந்தெனினும் தள்ள வேண்டும்
சஞ்சிகையின் தபால்தனை திருப்ப வேண்டும்
துள்ளாத கிள்ளிபோல் துள்ள வேண்டும்
துடைதட்டி கிரௌண்டிலே நிற்க வேண்டும்
கிள்ளாத முகப்பருவை கிள்ள வேண்டும்
கிருகிரென பரலோகம் கிட்ட வேண்டும்
அள்ளாத வினைபலவும் அள்ள வேண்டும்
அகிம்சா அகிலநீதி அன்பு தானே. (9)

பழித்தாலும் குலமகளை பழிக்க வேண்டும்
பங்கமிலா சிங்கமென வாழ வேண்டும்
விழித்தாலும் ராஜர்விழி விழிக்க வேண்டும்
விடியுமட்டும் கன்னக்கோல் வைக்க வேண்டும்



கழித்தாலும் காய்கறியைக் கழிக்க வேண்டும்
கண்டைமீன் துண்டெலும்பைக் கருத வேண்டும்
அழித்தாலும் பாட்டன்சொத்தை அழிக்க வேண்டும்
அகிம்சா அகிலநீதி அன்பு தானே. (10)

(இன்னும் தொடரும்.)

---

அடா அப்பா ஆண்டவா ?
அரவாபரணம் பூண்டவா ?
விடா கிருஷ்ண தாண்டவா ?
விளக்கமாக வேண்டவா ?
படாமியான் நீண்டவா ?
பகலு மிரவும் தூண்டவா ?
திடாரோக்யம் மூண்டவா ?
தினேகிருத்துவை காண்கவா ?

என்று, ஒரு நாள் குடதிசையிலிருந்து கிளம்பி கமால்கார பட்டணங்களை யெல்லாம் தமாஷ் பார்த்துவிட்டு ஜகாவாங்கித் திரும்பி,

மண்ணைநம்பி வேரிருக்க ஐலசா ! ஐலசா !
வேரைநம்பி மாமிருக்க ஐலசா ! ஐலசா !
மாத்தைநம்பி கிளையிருக்க ஐலசா ! ஐலசா !
கிளையைநம்பி இலையிருக்க ஐலசா ! ஐலசா !
இலையைநம்பி பூவிருக்க ஐலசா ! ஐலசா !
பூவைநம்பி பிஞ்சிருக்க ஐலசா ! ஐலசா !
பிஞ்சைநம்பி காயிருக்க ஐலசா ! ஐலசா !
காயைநம்பி பழமிருக்க ஐலசா ! ஐலசா !
பழத்தைநம்பி பட்சிருக்க ஐலசா ! ஐலசா !
பட்சியைநம்பி உடலிருக்க ஐலசா ! ஐலசா !
உடலைநம்பி உயிரிருக்க ஐலசா ! ஐலசா !
உயிரைநம்பி நீயிருக்க ஐலசா ! ஐலசா !
உன்னைநம்பி நானிருக்க ஐலசா ! ஐலசா !

என்று, சாய்ந்தாடி ! சாய்ந்தாடி ! ஒய்யாரம் பாடிக்கொண்டு, தாதாக்களையும்-மூதாக்களையும் பேட்டி கண்டுகொண்டு நடுப்பட்டணக் கரையோரத்திலே வந்து நின்று,

"பழுத்தப் பழமிருக்க பாடைக்கு ஆளிருக்க
உளுத்த மாமிருக்க உத்தரத்தில் சாய்வதேனோ."

ஐயா, தினகரனே ! நீர் தட்சண திசையை விட்டு, உத்தர திக்கில் சாய்வதேன் ? கொள்ளிக்கண்ணைக் காட்டிக் காய்வதேன் ? தேய்வதேன் என்று கேட்டேன். சூரிய நாராயணன், அப்பா விகடா ! இன்பமும்-துன்பமும் மாறி மாறி வருவதுபோல், இரு

னும்-வெளிச்சமும் மாறுகிறது. அதுபோல், பிறப்பும்-இறப்பும் உலகானுபவம். இது தெரிந்தும் தெரியாமலும் என்னை ஏசுகின்றார்-கூசுகின்றேன். நீ கோலாகல சிலம்புண்டு, நம்மூர் விகடகுழாங்கட்கு ஆனந்தமூட்டுவாயென வாழ்த்தி யனுப்பப் பெற்றேன். சாலக்-போலக் பம் பம். விகடன்.

---

## மடங்கள்

மடமாவது, பெரியோர்கள் இருந்துகொண்டு கல்வியறிவொழுக்கத்தையும், சமயத்தையும் வளர்த்தற்கு உரிய இடமாம். மடத்திலே ஜபம், பூஜை, தியானம் முதலியவற்றிற்கும், வேதாகமத் திருமுறைகளை வைத்துப் பூசை செய்தற்கும், வேதாகமங்களைப் படித்தல், படிப்பித்தல்கட்கும், சமையல், போசன முதலியவற்றிற்கும் பரிசாரகர்களும், அதிதிகளும் இருத்தற்கும் வெவ்வேறிடங்கள் விதிப்படி கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

மடத்தைக் கட்டுவித்தவரும், மடத்திலே வேதாகமத் திருமுறைகளைச் சம்பாதித்து வைத்துப் பூசை செய்தற் பொருட்டும், வேதாகமங்களைப் படிப்பவரும் படிப்பிப்பவருக்கும், அன்னம், வஸ்திரம், மருந்து முதலியவை கொடுத்தற்பொருட்டும், திரவியங்களையும் பூமிகளையுந் தானஞ் செய்தவரும், இலமாயுள்ள மடத்தைப் புதுக்குவித்தவரும் கடவுளுடைய உலகத்தை அடைந்து இன்பம் அனுபவித்து வாழ்வர்.

கருவி நூல்களையும், வேதாகமங்களையும் நன்றாகக் கற்றறிந்தவரும், சிவகருணை, பக்தி, வைராக்கியம், ஞானம் என்னும் நான்கும் உடையவருமாகிய ஆசாரியரே மடாதிபதிகளாதற்கு யோக்கியர். மடாதிபதிகள் மடத்தில் இருந்து தம்முடைய நித்தியகருமம் முதலியன வற்றைத் தவறுமற் செய்துகொண்டு வேதாகமத் திருமுறைகளைப் பூசைசெய்து, அவ்வேதாகமங்களைத் தாம் படிக்கவும், தம்மை அடைந்த நன் மாணாக்கர்களுக்குப் படிப்பிக்கவும், அம்மாணாக்கர்களுக்கும் பரிசாரகர்களுக்கும் மற்றைச் சனங்களுக்கும் காலந்தோறும் சமய நெறியைப் போதிக்கவும் வேண்டும்.

கன்மயாகம், தபோயாகம், ஜபயாகம், தியான யாகம், ஞான யாகம் என ஐவகை யாகங்கள் உண்டு. அவைகளுள் கன்மயாகமாவது, சந்தியா வந்தனம், கடவுட் பூசை, அக்கினி காரியம் முதலியனசெய்தல். தபோயாகமாவது, சாந்திராயணம், கிருச்சிரம், மசோப



வாசம் முதலிய விரதங்களினாலே சரீரத்தை வாட்டுதல். செபயாகமாவது, மந்திரங்களை விதிப்படி உச்சரித்தல். தியான யாகமாவது, மனதை வேறொரு விடயத்திலும் பொருந்தாத வண்ணம் நிறுத்தி இருதய முதலிய தானங்களிலே கடவுளுடைய திருமேனியைத் தியானித்தல். ஞானயாகமாவது, ஞான நூல்களைவிதிப்படியே, தான் ஓதலும், நன் மாணாக்கரை ஓதுவித்தலும், அவைகளின் பொருளைத் தான் கேட்டலும், நன் மாணாக்கரைக் கேட்பித்தலும், கேட்ட பொருளை நாடோறும் மறவாமற் சிந்தித்தலுமாகிய ஐந்துமாம். இவ்வைவகை யாகங்களும் ஒன்றுக்கொன்று ஏற்ற முடையன. கன்மயாகத்திற் பதின்மடங் கதிகம் தபோயாகம். தபோயாகத்தின் நூறு மடங்கதிகம் ஜபயாகம். ஜபயாகத்தின் ஆயிர மடங்கதிகம் தியானயாகம். தியானயாகத்தின் அநந்த மடங்கதிகம் ஞானயாகம். இவ்வைந்தனுள்ளும் கருமயாக முதலிய முன்னைய நான்கு யாகங்களை அனுட்டித்தவர் கடவுளுடைய உலகத்தை அடைந்து, அங்குள்ள திவ்விய போகங்களை அநுபவித்து, காலாந்தத்திலே மீளவும் ஜனனத்தை அடைவர். ஞானயாகத்தை அனுட்டித்தவர் பிறந்திறவாப் பெருவாழ் வாகிய சாயுஜ்ஜியத்தை அடைவார். ஆதலினால், ஞானயாகத்திற் சிறந்தது பிறிதொன்றுமில்லை.

இவ்வைவகை யாகங்களும் ஒன்றற் கொன்றேற்ற முடையனவாதலால், இவ்வைவகை யாகங்களைச் செய்வோருக்குக் கொடுக்கப்பட்ட அன்னதான முதலிய தானங்களின் பலமும் ஒன்றற்கொன்றேற்ற முடையனவாம். கருமயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது ஒரு பிறப்பளவு நிற்கும். தபோயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது நூறு பிறப்பளவு நிற்கும். ஜபயாகஞ் செய்வோர்க்கு கொடுத்தது ஆயிரம் பிறப்பளவு நிற்கும். தியானயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது கற்பமளவு நிற்கும். ஞானயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது மகா சங்கார காலமளவு நிற்கும். ஆதலினால், ஞான நூல்களைப் படிப்பவருக்கும் படிப்பிப்பவருக்கும் அன்னதான முதலிய தானஞ் செய்தலின் மிக்க தருமம் பிறிதொன்றுமில்லை.

வேதாகமத் திருமுறைகளுக்கு ஆடிப் பூரணையிலும், வைகாசி பூரணையிலும் விசேஷ பூசை செய்தல் வேண்டும். திருமுறையேடுகள் நெடுநாட் பயலப்பட்டு முறிதல், நெரிதல், எழுத்துத் தெரியாமை முதலிய பல குற்றங்களைப் பொருந்தினால் பிழையறவித்து எழுத வல்லவர்களாலே எழுதுவித்து, மைக்காப்புச் சாத்தி, அந்தத் திருமுறையைப் பூசித்தல் வேண்டும். பின்பு, பழைய திருமுறையைப் பசுநெய்யிலே தோய்த்துக் கடவுளுக்கு ஓமஞ் செய்தல் வேண்டும்.

மடாதிபதிகள், தம்மிடத்தே கற்கும் மாணாக்கர்களுள்ளே அறவிகளுக்கும், வறியவர்களுக்கும் அன்னம், வஸ்திரம் முதலியவை கொடுத்துச் சிறிதும் பக்ஷபாத மின்றி அவர்களெல்லாரையுஞ் சம

மாகவே பெருங் கருணையோடு நடத்தல் வேண்டும். தமக்கு அவர்கள் யாதாயினும் குற்றஞ் செய்தால் அதனை பொறுத்துக்கொண்டு அவர்களுக்குப் பெற்ற தாயினும் பதின்மடங்கு மிக இனியராய் ஒழுகல் வேண்டும். அவர்களுக்கு வியாதி வந்தால் தமக்கு வந்தாற் போலவே மனந்தளிந்து, மருந்து செய்வித்து காலந்தோறும் பத்தியம் தவறுமற் கொடுப்பித்தல் வேண்டும். பழி பாவங்கட்குச் சிறிதாயினும் அஞ்சாது பந்தியிலேயே தமக்குந் தம்மைச் சார்ந்தவருக்கும் உயர்வாகிய பதார்த்தங்களைப் படைப்பித்துக் கொள்ளலும், மற்றை ஏழைகளுக்குத் தாழ்வாகிய பதார்த்தங்களைப் படைப்பித்தலும் அவிவேகிகளும் சீச்சீ என்று வெறுக்கத்தக்க மிக இழிந்த செய்கைகளாம். இப் பந்தி வஞ்சனை மிகக் கொடியது, கொடியது.

மடாதிபதிகள், தம்மிடத்தே கற்கும் மாணாக்கர்களை வருடந்தோறும் சபையில் பரீக்ஷை செய்து, அவர்களுக்குள்ளே சமர்த்தர்களுக்குக் கல்வியிலே மேன்மேலும் ஊக்கம் உண்டாகும் பொருட்டு பரிசு கொடுத்தல் வேண்டும்.

மடாதிபதிகள், தம்முடைய மாணாக்கர்களுள்ளே கல்வியறிவொழுக்கங்களால் நன்கு மதிக்கப்பட்டவர்களை ஊர்தோறும் உள்ள தம்முடைய மடங்களுக்கு அனுப்பி, அவர்களைக்கொண்டு அங்குள்ள பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கவும், ஜனங்களுக்குச் சமய நெறியைப் போதிப்பிக்கவும் வேண்டும். அவர்கள் தங்கள் நல்லொழுக்கத்திலும், செய் தொழிலிலும் வழுவினால் அவர்களைக் கண்டித்துத் திருத்தல் வேண்டும். திருத்தமுறாதவர்களை நீக்கிவிடல் வேண்டும்.

மடாதிபதிகள், தம்முடைய சீடர்கள்முதலாயினோரைத் தமது உபதேசத்தினன்மாத்திரமன்றித் தமது நல்லொழுக்கத்தினாலுந் திருத்தல்வேண்டும். நித்திய கருமம் வேதாகமபடனம், தேவாலய சேவை, வாய்மை, இரக்கம்போன்ற அடக்கம் முதலிய தருமங்களை ஆசாரியர் செய்வாராயின், அது கண்ட அவர் சீடர் முதலிய பிறருஞ் செய்து உய்வர். தேவதத் திரவியம் புசித்தல், நித்திய கருமம் விடுத்தல், கொலை, பிறர் பொருளை இச்சித்தல், பிறன் மனைவியைப் புணர்தல், வேசையைப் புணர்தல், பொய் சொல்லல், பொய் வழக்குப் பேசல் முதலிய பாவங்களை ஆசாரியர் செய்வாராயின், அது கண்ட அவர் சீடர் முதலிய பிறருஞ் செய்து கெடுவர். ஆசாரியார் தமது ஆன்மார்த்த பூசையைத் தாமே செய்யாது, பிறரைக் கொண்டு செய்வித்து அதற்கு உரிய காலத்தைத் தாம் வீணே போக்குவாராயின், அது கண்ட அவர் சீடர் முதலிய பிறரும் அவ்வாறு செய்து கெடுவர். ஆதலினால், ஆசாரியரிடத்தே நல்லொழுக்கம் இல்லாதபோது அவருடைய உபதேசம் பெரியதாயினும் பயன்படாது.



மடாதிபதிகளும், அவரைச் சேர்ந்த வித்வான்களும் உலகத்தாருக்கு விவேகம் உதிக்கும்பொருட்டு நல்ல நூல்களையும் உரைகளையுஞ் செய்து வெளிப்படுத்தல்வேண்டும். பழைய நூல்களையும் உரைகளையும் இறந்துபோகா வண்ணம் பல திறத்தாலும் சாவதானமாகப் பாதுகாத்தல்வேண்டும்.

புறச் சமயிகள் வேதாகமங்களாலு உணர்த்தப் படுஞ் சற்சமயத்தைத் தூஷித்துத் தங்கள் சமயத்தைச் சாதிக்கப் புகுந்தால், அவர்கள் சமயத்தை நிராகரித்துத் தஞ்சமயத்தைத் தாபித்தல் மடாதிபதிகளுக்குக் கடனாகும். இது செய்ய வன்மையில்லாதவரும் செய்யாதவரும் மடாதிபதிகளாதற்கு யோக்கியராகார். இவர் மடாதிபதிகளெனப் பெயர் வகித்துக் கொண்டு மடத்துக்கு உரிய பொருளை அநுபவித்தல் தம்முடைய அரசனோடு மாறுபட்ட பகை மன்னரை எதிர்த்துப் பொருதற்கு வன்மையில்லாதவரும், அது செய்யாதவரும் சேனாதிபதிகளெனப் பெயர் வகித்துக்கொண்டு சேனாபதித் தொழிலுக்கு உரியபொருளை அநுபவித்தல் போலும். இப்பாவிச் சேனாதிபதிகள் தம்மரசனாலே தண்டிக்கப்படுதல், தப்பினும் இப்பாவி மடாதிபதிகள் தங் கடவுளாலே தண்டிக்கப்படுதல் தப்பாது, தப்பாது.

மடாதிபதிகள், கல்வி விருத்தியும், சமயவிருத்தியுமாகிய பொது நன்மைக்குரிய பொருளெல்லாம் இடம்பத்தின்பொருட்டும், திருத்தி, இதங்களின் பொருட்டும், பாணவேடிக்கையின் பொருட்டும், தம்முடைய பட்சத்தாரைப் பாதுகாத்தற் பொருட்டும், அவருக்கு வீடு கட்டுவித்தற் பொருட்டும், அவருக்குக் கிராமம் வாங்கற்பொருட்டும், அவருக்குக் கல்யாணஞ் செய்வித்தற் பொருட்டும், மற்றை மடாதிபதிகளோடு சண்டைசெய்தற்பொருட்டும், வழக்காடற்பொருட்டும், அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் பரிதானத்தின் பொருட்டும், தம்மைத் தரிசிக்கும்பிரபுக்களுக்கும், அதிகாரிகளுக்கும், அவர் பெண்டிர் பிள்ளைகள் பரிசாரகர்களுக்கும் ஆபரணம் பீதாம்பர வஸ்திர முதலியன கொடுத்தற் பொருட்டும், அதிகாரிகள் வீட்டிலே கல்யாணம் நடக்கும்போது மண மகனுக்கும், மண மகளுக்கும் உயர்ந்த வஸ்திரம் அனுப்புதற் பொருட்டும் செலவு செய்து, தமது காலமெல்லாம் உலக விவகாரங்களிலே போக்குவாராயின், ஓகோ பொது நன்மை எப்படி நடத்தப்படும். ஐயையோ! உலகத்தார் எப்படிக் கடைத்தேறுவர். இவ் வியல்புடையவரைத் துறவறத்தாரென்றும் ஆசாரியரென்றும் கொள்வது எப்படி?

இடத்துக்கும், அன்ன வஸ்திரத்துக்கும் முட்டுப்பாடில்லாமல் அறிவு நூல்களைக் கற்றறிந்து கடவுளை வழிபட்டு உய்யலாம் என்று நம்பித் தங்கள் தங்கள் பிதா மாதா முதலாயினோரைத் துறந்துவிட்டு வந்து, மடத்திலே சீடர்களாய்ப் புகுந்தவர்களைப் பாது

காவாது கைவிட்டு, அப்பாதுகாப்புக்குரிய பொருளைப் பாவ விருத்தியின் பொருட்டுச் செலவு செய்வது நீதியாகுமா? பாவம்! பாவம்!! இதனைக் கேட்பார் இல்லையே? ஐயையோ! இவ்வநீதியை யார் பால் எடுத்து மொழிவோம்.

சாதியாலும், சமயத்தாலும் சமத்துவமுடைய மடாதிபதிகள் தம்முள்ளே அன்போடு கலந்து கடவுளுடைய குண மகிமைகளையும், பதி புண்ணியங்களையும் பாராட்டி உலகத்தார் கடைத்தேறும் பொருட்டுப் பொது நன்மைகளை நடத்துவது அழகு. இவ்வாறு செய்யாது பொறாமையினாலே தம்முள்ளே பகைகொண்டு கலகம் விளைத்துப் பொது நன்மைக்குரிய பொருளெல்லாம் பாழுக்கிறைப்பது அழகன்று.

மடாதிபதிகள், தம்முடைய சீடர்களுக்குள்ளே கல்வியறிவொழுக்கங்களால் மிகச் சிறப்புற்றவரென்று, அறிவுடையோர் பலராலும் நன்கு மதிக்கப்பட்டவரையே தமக்குப் பின் மடாதிபதிகளாய் இருக்கும்பொருட்டு நியோகித்தல்வேண்டும். சில மடாதிபதிகள் இப்படிச் செய்யாது தமது பாசத்தாருடைய பிள்ளைகள் கல்வியறி வொழுக்கஞ் சிறிதும் இல்லாதவரேயாயினும், அவரையே தமக்குப் பின் மடாதிபதிகளாய் இருக்கும்பொருட்டு நியோகிக்கின்றனர். அவர் மடத்திலே சீடர்களைச் சேர்க்காமல் முன்னுள்ள சீடர்களையும் ஓட்டிவிட்டுத் தமது பாசத்தாரையும் அவர் குடும்பங்களையும் தம்மோடிருத்திக்கொண்டு, பொது நன்மைக்குரிய பொருளெல்லாம் அவர்கள் பொருட்டே செலவு செய்கின்றனர். இப்படியாயிற் கல்வியும் சமயமும் எப்படி விருத்தியாகும்.

திருக்கோயிலும், திருமடமும் சமத்துவமுடையவை என்றும், அவைகளிலே புணர்ச்சி முதலிய குற்றங்களைச் செய்தவர் நரகங்களில் வீழ்ந்து, சந்திர சூரியர் உள்ளவரையும் அளவில்லாத துன்பங்களை அநுபவிப்பார் என்றும் ஆகமங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த உண்மையை அறிந்தும் மடங்களை வேதாகமங்களைப் படிப்பதற்கும், படிப்பித்தற்கும், சமய நெறியைப் போதித்தற்கும் இடமாக்காது, வியபிசாரத்துக்கும், சூதாடற்கும், குடும்பத்தோடு வசித்தற்கும், பிரசவத்துக்கும் இடமாக்குவோரும், வாடகைக்குக் கொடுப்போரும் ஐயையோ! நரகத்துன்பங்களுக்கு எங்ஙனந் தப்புவர். கல்வி விருத்திக்கும், சமய விருத்திக்கும் உரிய இடம் பொருளேவல்களெல்லாம் இவ்வியல்புடையவரிடத்தனவே யாமாயின், நம்முடைய தேசத்தார் சற்புத்தியும் சமய பத்தியும் உடையவராய்க் கடைத்தேறுவது எப்படி?

மடங்களும், அம்மடங்களைச்சேர்ந்த திரவியங்களும், பூமிகளும் பல காலத்திலும் பலராலும் கல்வி விருத்தியும் சமய விருத்தியுமாகிய பொது நன்மையின் பொருட்டுக் கொடுக்கப்பட்டன. இல்லறத்தாரை மடாதிபதிகளாக்கின், அவர் பற்றுடையவராதலால் பொது நன்மையை ஒழுங்காக நடத்தாது, அம்மடத்துக்கு உரியபொருளைத் தம்முடைய மனைவி மக்கள் முதலிய சுற்றத்தார் பொருட்டே செலவுசெய்வர். துறவறத்தாரை மடாதிபதிகளாக்கின் அவர் பற்றில்லாதவராதலால் அம்மடத்துக்கு உரிய பொருளிலே சிறிதாயினும் அபகரியாது, முழுமையும் பொது நன்மையின் பொருட்டே செலவு செய்பவர் என்னும் இருகருத்துப் பற்றியே துறவிகளையும், மடாதிபதிகளாக்கும் வழக்கும் முன்னோரால் உண்டாயிற்று. இவ்வுண்மையை அறிந்து கல்வியையும், சமயத்தையும் வளர்த்து முன்னோருடைய கருத்தை வழுவா வண்ணம் நிறைவேற்றுவதே மடாதிபதிகளுக்குப் புகழும் புண்ணியமுமாகும்.

பாலபாடம்.

---



## "விபூதி மகிமை"

" நீறுபுனை வார்வினையை நீறுசெய்த லாலே
வீறுதனி நாமமது நீறென விளம்பும் .
சீறுநர கத்துயிர் செலாவகை மருந்தாய்க்
கூறுடைய தேவிசையில் முன்னுரை கொடுத்தான் "

சகோதர, சகோதரிகளே! நமது புண்ணியபூமியாகிய இப்பரத கண்டத்தில் மானிடர்களாகப் பிறப்பது அரிதினிமரிது. பிறந்து இம்மை மறுமைக்கு வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு பெறுவதற்கு முக்கிய சாதனம் விபூதியேயாம். இவ்வரிய விபூதியை உணராதவர்கள் சிற்சிலர் மேனாட்டார்களது நடை, உடை, பாவனை முதலிய குலாசாரங்களைப் பின்பற்றி ஒழுகுபவர்கள் நாம் விபூதி யணிவதைக் கண்டால் வெறுக்கின்றனர். சிலர், விபூதி யணியும் முறைகளையும் மறந்தனர். சிலர், உலக்கைகளுக்குப் பூண் கட்டுவது போல் வளையம் வளையமாகவும், பட்டை பட்டையாகவும், அளவின்றி புலி வேடம்போல் வரி வரியாகத் தீட்டிக்கொள்வர். இதனால் பாவமேயன்றிப் புண்ணியமன்று.

" வேதிய ரென்னும் பெயர் மாத்திரம் பெற்று
நீதிமுறை தப்பியுந் தீபற
நீடுவார் சிலருந் தீபற "

" உலக்கையிற் பூணென் றுரைவிரு மவர்காத்
திலக்கலில் ரேகைகளும் தீபற
இடந் தெரியாம தீறுந் தீபற "

"வேதியனுலூன் விபூதியைப் போற்றானேல்
சாதிப் பறைய னென்றுங் கீபற
சாதித் துரைப்பாமென்றுங் கீபற" (சித்தாந்தவுந்தியார்)

பூர்வம் சிவபெருமான், பஞ்ச கிருத்தியங்களை நடத்தும் பொருட்டு உமாதேவியாருக்குக்காப்பாகத் தந்தருளிய இவ்விபூதியே யாம். இவ்விபூதியை பக்தியினால் பூசித்தாவது, முறைப்படி உத்தூளனமாவது, திரிபுண்டரமாவது அணிந்தால் மகா கோடி பாவங்களெல்லாம் நசிக்கப் பெற்றுப் பின் மோக்ஷமென்னும் பேரின்ப வீடு கிடைக்கப்பெறுவோம். இதுபற்றியே பத்திரகிரியாரும் விபூதியைப் பற்றிக் கூறுகின்றார்,

"என்னா ளகமிருந்து எய்தாத வீடுபெற
வெண்ணீறு பூசி விளங்குவது எக்காலம்" என்றார்.

சிலர் விபூதியாவது, திருமண்ணாவது நெற்றியிலணிவதில்லை. அவர்கள் முகம் பாபியென்று காட்டும்பொருட்டுப் பாழடைந்து, முகம் இருண்டிருக்கின்றதல்லவா? இது நோக்கியே ஔவையாரும் 'நீறில்லா நெற்றி பாழ்' என்று கூறியுள்ளார்.

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளும் சாரும் சிவகதி
சங்கார மான் திருவடி சேர்வரே." (திருமந்திரம்)

"வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
வோதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான்றிரு நீறே"
(திருஞான சம்பந்தர்)

அறிவிற் சிறந்த பெரியீர்! மதுரைக் கூன்பாண்டியன் சுரநோயைத் தீர்த்ததும், சமணர்களைக் கழுவேற்றியதும், பிரம ராக்ஷதன் சாப நீங்கியதும், நாயின் காலில் ஒட்டிய சாம்பல்பட்டுச் சண்டாளன் மோக்ஷமடைந்ததும், புகழ்ச்சோழ நாயனார், மெய்ப்பொருள் நாயனார், ஏனாதி நாயனார் முதலானவர்கள் சிவதரிசனம் பெற்று மோக்ஷமடைந்தது இவ்வரிய விபூதி மகிமையாலன்றோ! விபூதி யிழந்தவன் மஞ்சளிழந்த மங்கையைப் போலொக்குமென்று பெரியோர் கூறுவர்.

"எவரேனுந் தாமாக லலாடத்திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி
யுவராதே யவரவரைக் கண்டபோது உகந்தடிமைத் திறநினைந் தங்கு [வந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவ ரென்றுசொல்லி யிரண்டாட்டாற் றொழிந்தீசன் [றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ள கன்றாப்பூர் நடுதறியைக்
காணலாமே" (திருநாவுக்கரசு)



சகோதர சகோதரிகளே! பசுவின் சாணத்தைச் சுட்டு விபூதியாக்கி அதை பட்டுப்பை, அல்லது சம்புடம் அல்லது, குடுக்கைகளில் வைத்துக்கொண்டு அதைக் கையா லெடுக்கும்போதே "பக்தியோடு சிவசிவாவென்று திருநீற்றைப் பரித்து, கையா லெடுத்துப் பாரினில் வீழாதபடி யண்ணாந்து செவியோடு பருத்த புயமீதிலொழுக, நித்த மூவிரல்களால் நெற்றியின் முத்தலுற நினைவாய்த் தரிப்பவர்க்கு, தீவினை யணுகாது, தேக பரிசுத்தமாய், நீங்காது நிமலனங்கே சத்தியோடு நித்தம் விளையாடுவன்; முகத்திலே தாண்டவஞ்செய்யும் திரு, சஞ்சலம் வாராது; பாகதி யுதவு மிவரையே சத்தியும் சிவனென்னலாம்" என்றபடி, பக்தியால் அணிந்து மேலான சாயுச்சிய பதவி யடையும்படி பரமாத்மாவாகிய சிவபெருமானை இறைஞ்சுவோமாக. சுபம்! சுபம்!!

S. V. பழனியப்ப பிள்ளை,
சாலியாபாளையம்,
கரூர்.

## தமிழ் மொழியின் மாண்பு

நிலவுலகின்கண் ஏனைய தேசங்களைப்போ லல்லாமல், எல்லாச் செல்வங்களுக்கும் இருப்பிடமெனலாம்படி, நானில வளங்களும் ஒருங்கே யமையப்பெற்றிருந்து கலங்கரை விளக்கேபோல் அலகிலா ஜோதியுடன் விளங்கும் நந்தம் பரத கண்டத்தில் இற்றைக்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்கள், கடவுள் வழிபாடு, அறிவு முதிர்ச்சி முதலியவற்றில் தேர்ந்து திராவிட தேய முழுவதும் ஏக சக்கிராதிபத்தியஞ் செலுத்தி விளங்கினர் என்பதற்குச் சான்றுகள் சங்க நூல்களில் காணக்கிடக்கின்றன. அதை எடுத்துக் கூறப்புகின் நமது 'ஆனந்த விகடன்' இடந்தர தயங்குவான் என்று எண்ணுகிறேன். சிறக, தமிழ் மொழி என்பதற்கு இனிமையான மொழி யென்று யாவரும் அறிந்ததே யாம். இதனை 'வண்டு தமிழ்ப்பாட்டிசைக்கும் தாமரையே' என்னுங் கம்பர் பெருமான் திருவாக்கும் சாலவும் சிறந்தது. நந்தம் மொழியின் மேன்மையை நோக்குங்கால் பழைமையிலும் இனிமையிலும், செம்மையிலும்; தமிழ் மொழியும், தமிழர் நாகரீகமும் தலை சிறந்து விளங்கி யிருத்தற்கு தலைச்சங்கம் விளங்கிய தமிழ் மதுரை என்று கூறுவர். அஃதது, எவ்வா திருப்பினும் எண்ணிறந்த தேவாலயங்களும், பிரம்மாலயங்

களும் வேறு பல சின்னங்களும் மேற்கண்ட மதுரையிலும், ஜாவா சுமத்ரா தீவுகளில் இப்பொழுதும் சான்றாக விளங்குகின்றன.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த நந்தம் தாய் மொழி தற்காலம் இருக்குமிடம் தெரியாமல் போய்விட்டது. ஞானத்திலும், பரமோனத்திலும் சிறந்து விளங்கிய சமயாச்சாரியர்களையும், சிவபெருமானது திருவிளையாடல்களுக்கும் உரியதாய் விளங்குவது தமிழ் நாடென்பதை நாம் செப்புதல் வேண்டுமா? திருவள்ளுவர் செய்த திருக்குறளை விடச் சிறந்ததோர் மறைநூல் இப்புவியில் வேறு உண்டா? கரும்பையும் அமுதையும் கைக்கச் செய்யும் கம்பராமாயணம் பாடிய கம்பர் பெருமானின் பெருமையை எவ்வாறு பேசுவது? நம்மைப் பெற்றதும், வளர்த்ததும், தாலாட்டித் தூங்க வைத்ததும், மழலைச் சொற்களால் அன்னையையும் பிதாவையும் மகிழச் செய்ததும் நந்தம் தாய் மொழியேயன்றோ?

பண்டைக் காலத்திய மறை நூல்களும் தமிழ்ப் பாஷையிலேயே எழுதப்பட்டுள்ளது. இத்தகைய அமிழ்தினும் இனிய நந்தம் தமிழ் மொழியை விட்டு விட்டு மேனாட்டு பாஷைகளைக் கற்பது, கேவலம் சுற்றத்தார்களை விட்டு விட்டு அந்நியர்களிடத்தில் நேசம் செய்கிறவர்களுக்கு உவமையாகச் சொல்லலாம். நமக்கு இடர் நேர்ந்த காலத்தே நம் சுற்றம் உதவுமேயன்றி அந்நியர் உதவிபுரிவது அரிதேயாம். அதேபோல், நமக்குச் சுயபாஷை உதவுமேயன்றி பிறபாஷைகள் உதவா. பலசிறப்பட்ட பாஷைகளைக் கற்று ஒவ்வொரு தேயத்தின் கருத்தை அறிந்து கொள்வது நல்லதேயாயினும், நாம் நமது தாய் மொழியை கைவிட்டு அந்நிய பாஷைகளிலே காலம் போக்குவது நலமாகாது. இப்படி யான் சொல்வதினால் ஆங்கிலம், பிராஞ்சு முதலிய பாஷைகளைப் படிக்க வேண்டாமென்பது நமது கருத்தல்ல. ராஜபாஷைகளை பயின்று தேசாபிமானியாய் உலகிற்கு உதவிபுரிவது மாந்தர்க்குள்ள முக்கிய கடன்களில் ஒன்றாதலின், அதனை நாம் ஏற்பது சாலவும் சிறந்ததேயெனினும், "பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்தது போல்" நமது தாய் மொழியைச் சுத்தமாக விட்டுவிடக் கூடாதென்பதே கருத்து.

தமிழ் நாட்டின் தற்கால நிலை என்ன? தமிழ் நாடு அடிமை என்னும் காட்டிலே, அறியாமை என்னும் கிணற்றிலே, வறுமையென்னுஞ் சேற்றிலே ஆழ்ந்து கிடக்கின்றது. பழமையை அறிந்து தங்கள் பெருமையை உணர்ந்த தமிழர்களை நமது நாடு இழந்து விட்டது. நம் நாட்டின் தேவாலயங்களின் அழகை, 'துரைமார்கள்' அல்லவோ கண்டு மகிழ்கின்றார்கள். ஆனால், தமிழர்களுக்கு அழகு தெரியவில்லை. அதன் தோற்றத்தையே காண்கின்றார்கள். இங்கிலாந்து என்னும் பெருந் தேயத்தார்கள் தங்கள் தாய் மொழியை பெரும் சீருடன் போற்றி வருவதை காண என் மனம்





அத்தியந்த ஆனந்த மடைகின்றது. அன்னவர்களின் தாய் மொழி என்றும் சிறப்புற்றோங்கி வளருமாறு இறைவனை என் மனமொழிகளால் வணங்குகின்றேன். ஆகையால், சகோதர சகோதரிகாள்! நாம் நல்வாழ்வு வாழவேண்டும். வறுமைகள், சிறுமைகள் நீங்கிப் பெருமைகள் உண்டாகவேண்டும். வாழ்க்கையில் நேரும் எத்தனையோ அறியாமை முதலியவைகளை ஞானமென்னும் வாளால் வீசி எறியவேண்டும். தமிழ் நாட்டுச் செல்வர்காள்! இனியேனும் நந்தம் மொழியைக் குன்ற விடாது பல்லாற்றானும் வளர்த்து இன்புற்று வாழ்வீர்களாக. இறைவன் துணை புரிக!

சுபம்.

செய்யூர். ஸ்ரீ ராஜாராம்.

---

# தபால் இலாகா

தபால் இலாகாவென்பது ஜனசமூகத்தினர்களின் சௌகரியத்தையும், சிறிது இலாகாதாரரின் வருமான நோக்கத்தையும் பொறுத்ததாகும். எனவே, தபால் அதிகாரிகளும் ஊழியர்களும் பொதுஜன சௌகரியத்தை நாடியே நிற்றல் வேண்டும். சில அதிகாரிகளும் ஊழியர்களும், தங்களுக்குக் குடும்ப போஷணைக்காகவே சம்பளம் தருகிறார்கள் என்று எண்ணுவதுந் தவிர பொது ஜனங்களிடம் சாதனத்தையும் நேயத்தையும் பாராட்டாது தங்களை ஓர் உயர்தர நீதிமன்றத் தலைவரென நினைந்து கொண்டு அன்னியரைத் துவேஷிக்கின்றனர். ஸ்டாம்பு வாங்கவாவது, மணியார்டர், இன்ஷ்யூர்டு ரிஜிஸ்டர் செய்யவாவது போகிறவர்களைப் பல மணிநேரம் காக்க வைப்பதுடன், சொள், சொள் என்று விழுகின்றனர். தகவல் அறிய வேண்டி கேட்கும் கேள்விகளுக்குச் சரியானபடி பதில் கூறாது, "கோயம்பத்தூர் கெல்லுமிஷன், மோட்டார் வண்டி அரண்மனை" என்பது போன்ற பதிலை உரைக்கின்றனர். தபால் எத்தனை மணிக்குக் கட்டப்படும் என்று கேட்டால் லெட்டர் பாக்ஸை திறந்தவுடன் தபால் கட்டுவோம் என்கிறார்கள்.

---

இனிய செந்தமிழ் நடையில் எழுதி கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு அழகிய கலிகோ பயிண்டு செய்த நாலுரூபாய் விலையுள்ள "விநாயக புராண வசனம்" ஆனந்த விகடன் ஆபீசில் கிடைக்கும்.

போஸ்ட்மன்களோ வென்றால் "அரசன் எவ்வழி அவ்வழி குடிகளும்" என்பதை யொட்டியே யிருக்கின்றனர். விலாசதாரருக்குக் கடிதம் வந்தால் நாலுதரம் நடக்கப் பால்மாறி லெட்டரைத் திருப்பி விடுகின்றனர். வி. பி. போஸ்டு அனுப்பினால் வந்த தினம் போய் இன்டிமேஷன் கொடுத்து விடுகிறார்கள். நாட்டுப் புறத்தார்களுக்கு இன்டிமேஷன் விவரம் இன்னதென்று தெரியாமையால் போஸ்ட்மன் மறுபடி வி. பி. யைக்கொண்டு வருவான் என்று எண்ணி எதிர்பார்த்திருக்கின்றனர். போஸ்ட்மனோ மறுபடி அவ்விடம் போவதில்லை. ஒரு வாரம் ஆனதும் காரணம் இன்றி திருப்பி விடுகின்றனர். அதனால் கம்பெனிக்காரர்கட்கு நஷ்டம் உண்டாகின்றது, போஸ்டல் டிபார்டுமெண்டுக்கும், வி. பி. மணியார்டர் கமிஷன் நஷ்டமாகின்றது. இதுகளை இலாகா உத்தியோகஸ்தர்கள் யோசித்து வி. பி. போஸ்ட் டெலிவரியாகாமல் திருப்பி விடுகிற காலத்தில் போஸ்ட்மன் விலாசதாரரிடம் போய் கேட்டு, தகுந்தபடி அவர்கள் சொல்லும் காரணத்தைக் கண்டு எழுதியே திருப்பவேண்டும் என்கிற ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவரும் சட்டத்தைப் பிறப்பித்தால் வி. பி. திரும்பி விடுவதால் நேரிடும் நஷ்டம் அநேகமாய் குறையும் என்பதைக் கவனிப்பார்களாக. ஏதோ விகடன் முணு முணுக்கிறான் என்று அதிகாரிகள் கண்ணை மூடிக்கொள்ளாமல் திறப்பார்கள் என்று கோருகிறேன்.

---

## பலிப் பொங்கல்

நம் நாட்டில் மாமிச பட்சணிகளில் சிலர் "தான் கெடுவதுமன்றி ஐயனாரையும் கெடுத்து விட்டான்", என்பது போலத் தாங்கள் உண்ணும் உணவிற்குக் காரணமான ஆடு, பன்றி, கோழிகளைச் சில தேவதைகட்குப் பலியிட்டுப் பின்பு உண்கிறார்கள். உண்ண இஷ்டங்கொண்டார் தனியே வீட்டில் கொன்று உண்ணலாகாதா? தேவதைகட்குப் பலியிட்டுத்தானா தின்னல் வேண்டும். பல ஜனங்களின் முன்பு பலி யிடுகிறபோது அதைக் கண்டு அநேகர் நடுங்குகின்றனர். சிலர் வருந்துகின்றனர். சிலர் அருவெறுப்பு கொள்கின்றனர். சிலர் ஐயோ! ஐயோவென்று அலறுகின்றனர். இவ்வாறு பற்பலர் துன்புறும் காரியத்தைச் சிலர் செய்து அதனால் மனம் திருப்தி அடைவது தகுதியல்ல. கடவுளால் சிருஷ்டிக்கப்பெற்ற பலவேறு பிராணிகளில் மனிதர்களும் ஒன்றே யாகும். அவ்வாறிருக்க, மனிதர்கள் மற்றைய மிருகங்களைத் தெய்வத்திற்குப் பலியிடல், பெற்ற தாயாரின் முன் அவன் குழந்தையை வெட்டிக் காட்டுவதை



ஒக்கும். கடவுளுக்கு மனிதரும் ஒன்று, மற்ற ஜந்துக்களும் ஒன்றே. உலகில் உருவ பேதமேயன்றி உயிர்ப் பேதமில்லை. ஓர் மனிதனை வெட்டியோ அல்லது அடித்தோ துன்புறுத்தினால் அவன் எவ்வளவு சங்கடமும் துன்பமும் உறுவானோ அவ்விதமே மற்றைய பிராணிகளும் துன்புறும் என்பது திண்ணம். அவ்வாறு அவைகளைத் துன்புறுத்துகிறபோது அவைகள் தங்கள் கஷ்டத்தை வாய்விட்டுச் சொல்வதற்கின்றி சாலச் சங்கடமுறுகின்றன. ஆதலால் பிராணிகளைப் பலியிடும் வழக்கத்தைக் கையாளும் மானிடர்களே! நீங்கள் கருணையைக் கையாண்டு அவ்வித மகா பாதகச்செயலை இன்றோடே ஒழியுங்கள், பலியாகும் மனிதர்களாகிய நாம் என்ன பகுத்தறிவில்லாத மிருகங்களா? கொடிய அரக்கர்களா? விடப் பூச்சிகளா? நாம் வெட்டுகிறகாலம் அவைகள் நம்மைப் பார்த்து, அடா பாவிகளே! துரோகிகளே! கருணையற்ற துஷ்டர்களே! உங்களுக்கு இரக்கமில்லையா? தயை இல்லையா? உங்கள் குழந்தை குட்டிகள் போல அல்லவா நாங்களும் என்று சாபமிடும். அச்சாபங்கள் பலியிடும் நபர்களின் குடும்பத்தைச் சுற்றிக்கொண்டிருக்கும். ஆகையால் அன்பர்களே! புண்ணிய சீலர்களே! இனி பலியிடும் கொடிய பழக்கத்தை விட்டு தேவதைகட்குப் பாற்பொங்கல் இடுங்கள். மறவாதீர்கள், இது விஷயமாகக் காரைக்குடி சிவனடியார் திருக்கூட்டத்தார் ஊர்கள் தோறும் சென்று உபந்நியாசங்கள் மூலமாகக் கதறுகிறார்களே! அதைக் கவனியுங்கள்.

(இது மறுமுறையும் வேறு விதமாக வெளிவரும்)

---

## விகடன் விண்ணப்பம்

சகோதரர்களே! விகடன் ஓர் விண்ணப்பம் படிக்கப் போகிறான். ஆனால் பழயபாட்டுதான். அதாவது, சிலர் சந்தாதாரராகச் சேருவதாக கையெழுத்திட்டு விட்டு, வி. பி. அனுப்பினால் திருப்பி விடுகின்றனர். அதனால் ஆபீசுக்கு நஷ்டமும் சங்கடமும் ஏற்படுகின்றது. ஆதலால், இனி கையெழுத்திடுபவர்கள் யோசித்துக் கையெழுத்திட வேண்டுகிறேன். அப்படிக் கவனியாது சேர்ந்து வி. பி. யைத் திருப்பிவிட்டு விகடனுடைய தோல்வாயைக் கிளப்பவேண்டாம். விகடன் தூற்றினான் என்று பின்பு தலைசாய்த்துக் கொள்ளவேண்டாம். திருப்பியவர்கள் எல்லாம் மணியார்டர் மூலம் பணத்தை அனுப்பி விடுங்கள். உண்மை! உண்மை!! உண்மை!!!

---

# பெரிய புராணம்

## திருநீலகண்டர் சரித்திரம்

(103-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவர்தங்கள் மனைவி யாரும் அருந்ததிக் கற்பின் மிக்கார்
புவனங்க ளுய்ய வையர் பொங்குநஞ் சுண்ண யாஞ்செய்
தவமின்று தடுத்த தென்னத் தகைந்துதான் றரித்த தென்று
சிவனெந்தை கண்டந் தன்னை திருநீல கண்ட மென்பார்.

இதன் பொருள் :—மேற்கூறிய நாயனாரின் மனைவியாரோ கற்பில் அருந்ததிக்கும் மேற்பட்டவர். தவிர, பூலோகம் முதலிய உலகங்கள் உய்யுமாறு சிவனார் ஆலகாலவிடத்தை உண்ட காலம் அவ்விடம் உள்ளே சென்று கடவுளைத் துன்புறுத்தாது நெஞ்சிலேயே நின்றது. நாம் செய்த தவ மகிமையே (அதாவது, சிவன் பின்னும் பலருக்குக் காட்சிதந்து வேண்டிய வரத்தைத் தரவே நாம் செய்த தவம் என்றார்.) ஆகலால், அக்கண்டத்தை நாயனார் தினம் சதா திருநீலகண்டம் என்று கூறுவாராயினர். அதன் காரணமே நாயனாருக்குத் திருநீலகண்டர் எனப் பெயர் ஆயிற்று.

“ஆனதாங் கேள்வ ராங்கோர் பரத்தைபா லணைந்து நண்ண
மானமுண் பொருது வந்த வூடலான் மனையின் வாழ்க்கை
ஏனைய வெல்லாம் செய்தே உடனுறை வியையா ராகுர்
தேனலர் கமலப் போதிற் றிருவினு முருவ மிக்கார்.”

இதன்பொருள் :—தேனலர்கமலப் போற்றிருவினு முருவமிக்கார் = தேன் துளிக்கும் தாமரைமலரில் வசிக்கும் மகாலட்சுமியைக் காட்டிலும் அழகு வாய்ந்த திருநீலகண்ட நாயனாரின் மனைவி. ஆனதாங் கேள்வர் ஆங்கோர் பரத்தைபாலணைந்து நண்ண = தன் மனதிற் கிசைந்த நாயகனார் இதுகால மில்லாது ஒரு நாள் பரத்தையர் வீட்டிற்குச் சென்று போகந்துய்த்து வந்ததை அறிந்து, மான முண் பொருது = மனத்தின் கண்ணே தோன்றிய வருத்தத்தை அடக்க முடியாது, வந்த வூடலான் = இருவருக்கும் உண்டான பிணக்கினால், மனையின் வாழ்க்கை ஏனையவெல்லாம் செய்தே = வீட்டிலுள்ள மற்றக் காரியங்களையெல்லாம் சரிவரச் செய்து வந்தார்கள். ஆயினும், உடனுறை இசையாரானார் = நாயகருடன் சயனிக்க மட்டில் இணங்கவில்லை. கற்புவாய்ந்த பெண்கள் தமது நாயகன் அன்னிய பெண்களின் போகத்தை நுகர்ந்ததாகத் தெரிந்தால் உயிரையும் விட முன் வருவார்கள். ஏனெனில், தன்னைக் காட்டிலும் அழகிலோ உபசாரத்திலோ மிகுந்தவளாக இருந்ததால்லவா நம் நாயகர் பிற மாதர்களிடம் சென்றார். அப்போது நம்மிடம் அவ்வளவு பற்றில்லைபோலும். பற்றில்லாத நாயகனிடமிருந்து வாழ்வதினும் இறப்பதே மேலெனக்கொள்வர். ஒரு மனிதன் தான் மணந்த



மனைவி தன்னையன்றி வேறு ஆடவனிடம் சல்லாப வார்த்தையாடினால் அதைக் காணும் நாயகனுக்கு எத்தனை கோபமும் வருத்தமும் அவமானமும் உண்டாகுமோ அதைப்போலவே, தான் அன்னிய மாதர்களிடம் போகுங்கால் தம் மனைவிமார்களுக்கு இருக்கும் என்பதை எண்ணல் வேண்டும். கற்பு என்பது ஆண் பெண் இருபாலர்க்குமே உடையது. பெண்கள்மட்டிலுமே கற்பை அனுட்டிக்க வேண்டும். ஆண்மக்களுக்கு அவசியமில்லையென்பது பொருந்தாது. தவிர, நாயனார் மனைவி தன் நாயகன்மீது கொண்ட கோபத்தால் வீட்டுக் காரியங்களைச் செய்யாது அடம் செய்யவில்லை. தற்கால மாதர்களோ தன் நாயகனிடம் சண்டையிட்டுக் கொண்டால், அன்றையதினம் சமையல் செய்யாது பூச்சியம் செய்து விடுகின்றனர். அதற்குமேல் கேட்டால் புருஷன் தலை போய்விடும். திருப்பாட்டோ ஓயாது, மூன்று நாள் எழுந்திருக்கமாட்டார்கள், நாலு நாள் குளிக்கமாட்டார்கள், எழு நாள் தலை சீவ மாட்டார்கள். அந்த வாரம் முடிய புருஷனிடம் சரியாய் பேச மாட்டார்கள். அச்சமயத்தில் வீட்டில் இருக்கும் குழந்தைகட்கு கிடைக்கும் அடியும் திட்டும் அநேகம். மாமனார் மாமியார்கட்கும் திண்டாட்டமே. சமையல் பாகங்களிலோ ஒன்றில் மூன்று பாகம் உப்பு, மற்றொன்றில் புளியே இராது. சோற்றிலோ, (நாட்டரசன் கோட்டை கோவிற் சோறு மாதிரி) பாதி பாகம் கல்லாயிருக்கும். இந்த உபத்திரவத்திற்குப் பயந்து சில சாதுக்கள் மனைவியிடம் சண்டை போடுகிறதில்லை. என்றாலும், இவ்வாறான தீய குணங்களை உடையவரல்ல திருநீலகண்ட நாயனார் மனைவி; உத்தமக் குணமுடையாரானதால், வீண் வம்புகளின்றி தன் நாயகருக்குச் செய்ய வேண்டிய சகல வேலைகளையும் சரிவரச்செய்து வந்தனர். முக்கியமான ஒரு விஷயத்தில் மட்டும் இணங்க மனம் இசையாமலிருந்தார்.

“மூண்டவப் புலவி தீர்க்க அன்பனார் முன்பு சென்று
பூண்தயங்கு மிளமென் சாயல் பொற்கொடி யனையார் தம்மை
வேண்டுவ விரந்து கூறி மெய்யுற வணையும் போதில்
தீண்டுவீ ராயி னம்மைத் திருநீல கண்டம் என்றார்”

இதன் பொருள் :—மூண்ட அப்புலவிதீர்க்க = திருநீலகண்ட நாயனார் தன் மனையாட்டிக்கும் தனக்கும் உண்டான பிணக்கை நீக்கிக்கொள்ள, அன்பனார் = கடவுள் திருவடியில், அல்லது அடியார்கள் மீது அன்பைச் செலுத்தும் திருநீலகண்டனார், முன்பு சென்று = தன் மனையாட்டியின் முன்னேபோய், பூண் தயங்கும் இள மென் சாயல் பொற்கொடி அனையார் தம்மை = ஆபரணங்களால் பிரகாசிக்கும் பூங்கொடிபோன்ற தம் மனையாட்டியை, வேண்டுவ இரந்து கூறி = இதவார்த்தைகளினால் இரக்கமாகப் பேசி, மெய்யுற அணையும் போதில் = தாம் அம்மாதை வலிதிற் றொட்டணையப் போகுந்தருணத்தில், தீண்டு வீராயினம்மைத் திருநீலகண்டம் என்றார் =

அவ்வம்மையார் தன்னைத் தொட வரும் நாயகனைப் பார்த்து, நீர் என்னைத் தீண்டுவீராயின் = திருநீலகண்டத்தின்மீது ஆணை யிருக்கிற தென்றார்.

புலவி தீர்த்தல் என்பது சகலருக்கும் உள்ள வழக்கம். ஆயினும், திருநீலகண்டர் தாசியின் வீட்டிற்குச் சென்றது மிக தவறென் றுன்னினர் அம்மையார். ஆகலான், அவ்வாறு கூறினர்.

(தொடரும்)

## சிவ கங்கை

சிவ கங்கை என்பது ஓர் நகரம். இது பாண்டிய நாட்டில் உள்ள ஜமீன்களில் ஒன்று. தற்போது இராமநாதபுரம் ஜில்லாவில் சேர்ந்திருக்கிறது. மற்றுமுள்ள சிற்சில ஜமீன்களைக் காட்டிலும் இது மிகச் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. குடிகளின் சௌகரியத்தையும், ஜமீன் வருமானத்தையும் கொண்ட ஏற்பாடுகளில் முதன்மைத்தானது. விசாலமான பரப்பையுடையது. மேற்குப் பாகத்திலும், தெற்கில் சில பாகத்திலும் வெற்சாகுபடி. செய்யும் நஞ்செய் முதலிய நிலங்கள் செழிப்பா யுள்ளது. காளையர் கோவில், கோட்டியூர், நாட்டரசன் கோட்டை முதலிய பெரிய தேவாலயங்களும் ஜமீனைச் சேர்ந்ததே. ஷை தேவாலயங்கள் செவ்வனே நடைபெறுகின்றன. அம் மூன்றனுள் ஒன்றாகிய நாட்டரசன் கோட்டை கண்ணுடைய நாயகி அம்மன் ஆலயம் தன வைசியக் கன்னியர்கள் பெரு முயற்சியில் திருப்பணி நடந்து வருகின்றது. தவிர, சிவ கங்கைப் பட்டணத்தில் ஜமீன்தார் வசிக்கும் மாளிகை மிகப் பெரிதாயும் அமைப்பாயும் கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வூர் ஜமீன்தாரை சகலரும் ராஜாவென்று கூறுவது வழக்கமா யிருக்கிறது. அவர் வசிக்கும் மாளிகைக்கு அரண்மனை யென்றே வழங்குகின்றது. எனவே ஷை ஜமீன்தாருக்கு இராஜாக்களுடைய குணங்கள் பலவும் பொருந்தி யிருக்கின்றது. தற்போதைய அரசர் தரும சிந்தை யுடையவர், கல்வி பயின்றவர், கற்றோர்மாட்டன்புடையவர், கற்றவர்களின் சேர்க்கையைக் கொண்டவர், அவர் அநேகம் தருமங்களை நடத்தி வருகிறார். அவைகளில் முதன்மைத்தானது, உள்ளூரில் வேலை செய்து ஜீவிக்க முடியாத கூன், குருடு, செவிடு, ஊமை, கிழம், நொண்டி இவர்களுக்குத் தினம் கட்டளையாய் அன்னமிடவும், யாத்திரிகர்களில் பிராமணர், பிராமண ரல்லாதார் என்கிற வித்தியாசமின்றி அன்னமிடவும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். ஆனால், அத்தருமத்தைக் கண்காணிக்குமாறு ஏற்படுத்தி யிருக்கும்



ஊழியர், அரசர் நோக்கத்தைக் கையாளாது, தமது மனச்சாந்திக்கு ஏற்ற வண்ணம் பிராமணர்கட்கு மட்டில் இலைபோட்டுப் பரிமாறி உண்ணச் செய்தும், அல்லாதாருக்கு சோற்றைப் பிசைந்து இவ்வளவென அளவு உருட்டி ஒவ்வோர் உருண்டை கொடுத்தும் வருகிறார். அது விஷயத்தில் ராஜா அவர்கள் கவனம் செலுத்தி சகலருக்கும் இலைபோட்டே பரிமாறும்படி ஏற்பாடு செய்தால் பொன்மலர் நாற்றமுடைத்து போன்றதாகும்.

தவிர, ஓர் தரும போஷகசாலைத் தனிப்பட ஏற்படுத்தி, கல்வி பயிலப் போதிய சௌகரிய மில்லாதவர்களின் மக்கட்கு ஊண், உடை முதலியன இலவசமாகத் தந்து கல்வி பயிலச் செய்து வருகின்றனர். அது மிகத் திருப்திகரமாகப் பட்சபாதமின்றி நடந்து வருகின்றது. அதில் பிராமணப் பையன்கள், கிறிஸ்தவர்கள், மகம்மதியர்கள், ஆதித் திராவிடர்கள் என்கிற வித்தியாசமின்றி பயின்று வருகின்றனர். மேற்பார்வைக்காரர் மிக ஊக்கமுடையவர் என்று விளங்குகின்றது. ராஜா அவர்கள் மேற்படி தரும காரியங்களில் சிரத்தை வைத்திருப்பதுடன் தம்மை நாடி வரும் ஏழைகள், வித்துவான்கள் முதலியவர்களிடம் மிக்க அன்பும் வாஞ்சையும் பாராட்டுகின்றனர். பரிசும் ஏற்ற வண்ணம் தருகின்றனராம். மத்தியிலுள்ளவர்களின் மிரட்டலுக்கு ஆளாகாமல் தப்பித்துக் கொண்டு அரசரைப்பட்டி கண்டு விட்டால் சென்றவன்பாடு கொண்டாட்டமே!

ஷை சிவ கங்கை நகரம் பார்வைக்கு அழகானது. அதில் ஆங்கில அரசாங்க கோர்ட்டுகள் பல உள. அதாவது, தாலூக்கா முன்சீப் கோர்ட்டு, சப்-கோர்ட்டு, தாலூக்கா கச்சேரி, மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு, ரிஜிஸ்டராபீஸ், ஆஸ்பத்திரி, மிருக ஆஸ்பத்திரி முதலியன. இந்நகர் மானாமதுரையில் ரயிலிறங்கி வடக்கே சுமார் 10-மைல் தூரம் வரவேண்டும். வண்டி சௌகரியம் உள்ளது. சிவ கங்கை அரசர் நீடூழி வாழ்க.

(மற்ற விவரம் பின்வரும்)

## கம்ப ராமாயணம்

### அழகுச் செய்யுள்கள்

ஆற்றுப்படலம் (அதாவது)

(கோசலநாட்டில் செல்லும்-ஆற்றின் புகழைக் கூறுவது)

“ஆச லம்புரி ஐம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பு நெறியின் புறஞ்செலா
கோச லம்புனை யாற்றணி கூறுவாம்.”

கம்பர் தாமியற்றிய இராமயண நூலில், முதற்கண் நாட்டுப் படலம் கூறாது ஆற்றுப்படலத்தைக் கூறியுள்ளார். அதன் நோக்கமாவது நாட்டுக்கு ஆறின்றி அணியில்லை. (ஆறில்லாவூருக் கழகுபாழ்) என்பதை யொட்டியே என்றெண்ண இடந்தருகிறது.

செய்யுளின் உரையாவது, ஆசலம்புரி ஐம்பொறி வாளியும் = பலவகைக் குற்றங்களைச் செய்கின்ற ஆண்மக்களுடைய ஐந்து பொறிகளாகிய அம்பும், காசலம்பு முலையவர் கண்ணெனும் பூசலம்பும் = பொன்னாபரணங்கள் பல மார்பிலணிந்திருப்பதால் அவைகள் ஒன்றோடொன்று தாக்கி அதனால் உண்டாகும் சப்தத்தை தாங்கிய தனங்களையுடைய மாதர்களுடைய கண்களாகிய போர்புரியுங் குணமுள்ள அம்புகளும், நெறியின் புறஞ்செலா = அவைகட்கு ஏற்படுத்தியுள்ள வரம்பைத்தாண்டி வேறிடம் செலுத்தாதார் பொருந்தியுள்ளதற்கு முகாந்தரமாயுள்ள, கோசலம்புனை ஆற்றணி கூறுவாம் = கோசலநாடு பெற்றுள்ள ஆற்றின் பெருமையான அழகைக் கூறுவாம்.

நெறியின் புறஞ்செலா என்றமையால், கோசல நாட்டிலுள்ள ஆடவர்களும், மகளிர்களும் தத்தமக்கு என்று மணந்தார் மாட்டன்றி அன்னியரிடம் காதலின் நோக்கத்தைச் செலுத்தாதவர்கள், அதாவது, விபசாரம் என்பதே இன்னதென்று அறியாதவர்கள், உத்தமர்கள் என்று கூற இடந்தருகின்றது. ஓர் நாடு செழிப்பாக சகல குறைவுமின்றி தோன்றுவதற்கு கற்புடையார் மிகுந்திருத்தலே காரணம் என்பார் பெரியோர். விபசாரம் என்பது ஆண்பெண் இருபாலருக்கும் உள்ள குணத்தைக் குறிக்கும். பெண்மக்கட்கு மட்டில் அன்று.

## வேசையர்க்கும் வெள்ளத்திற்கும் சிலேடை.

"தலையு மாகமுந் தாளுந் தழீஇயதன்
நிலைநிலா திறை நின்றது போலவே
மலையி லுள்ள வெலாங்கொண்டு மண்டலால்
விலையின் மாதரை யொத்தவவ் வெள்ளமே."

மேற்கூறிய ஆற்றில் வெள்ளம் வரும்போது விலைமாதர்களை நிகர்த்துத் தோன்றியது. எவ்வாறெனில், பொருள் பெண்டிர்கள் தம்மைக் காதலித்துவரும் காமுகாடவர்களின் தலையுமாகமும் தாளுந்தழீ = தலை, தேகம், பாதம் முதலியனவற்றைத் தழுவி மிகவும் அன்புடையார்போலக் காட்டுவர். ஆயினும், அச் செய்கை பார்வைக்குமட்டில் காமுக அசடர்கட்கு நன்றெனவும், உண்மையெனவுந் தோன்றுமே யொழிய, அம்மாதர்கள் தங்கள் உள்ளப் பூர்வமாகச் செய்யாதொழிவர். அவ்வாறு ஆடவர்களின் தேகம் முதலானவற்றைப் போலி அன்புடன் தழுவுங் காலத்திலும்கூடப் பற்றின்றியே செய்கை. இருக்கும் செய்யுங் காரியங்களின்வழி மனம் நிற்காமை



பற்றி அதன் நிலைநிலாதிறை நின்றதுபோலவே = அவர்கள் செய்வழி மனம் நில்லாது வேறு தன்மையில் தாண்டுவதுபோலவே, தன்னைக் காமுற்றாரிடம் பலவகைப் பொருளைப் பறித்துக்கொண்ட பின் சிறிதும் காமுகரிடம் மனதையும் செய்கையும் பொருத்தாது செய்வதுபோல, அவ்வாற்றில்வரும் வெள்ளமானது மலையிலிருந்து வருங்கால் மலையிலுள்ள வெலாங்கொண்டு மண்டலால் = அம்மலையின் உச்சியையும், நடுவிடத்தையும், அடிவாரத்தையும் தழுவுதல் போலப் பாவி சிறிது நேரமாவது பொருந்தியிராது. ஆங்குள்ள நவரத்தினம் முதலிய பலவகைப் பொருளையும் வாரிக்கொண்டு வெளியே வந்துவிடலால், வேசையர்க்கும், வெள்ளத்திற்கும் சமம் என்றார்; அதுமட்டிலல்லாது பின்னும் சில குணங்களும் பொருந்தியுள்ளன. அவையாவன, வெகு விரைவாய் செல்லும் வெள்ளத்தில் நீந்தத் தெரியாதவனாவது அல்லது, நீந்தத் தெரிந்தவனாவது இறங்கினால் அவனை அவ்வெள்ளம் அடித்துக்கொண்டு சென்றுவிடும். வெள்ளத்திலாழ்ந்தவன் மீளவும் உயிர் பெறல் கடிது. தனது உற்றார் பொருள் முதலியனவற்றையும் காண்பது கடினம். அஃதே போன்று, வேசையர் மயலில் இறங்கிய ஒருவன் எவ்வகையிலும் மீளான். உறவினர் பொருள் முதலியவற்றையும் இழந்தவனாகிறான். ஆற்று வெள்ளத்தில் இறங்குகிற காலம் குளிர்ந்து சுகந்தருவது போல் காட்டி ஆளை அமிழ்த்திவிடும். வேசைகளிடம் செல்லும் போது முதலில் சுகம் தருவதுபோலக் காட்டி பொருள் பறிப்பார். தவிர, மற்றொன்று ஆற்றுவெள்ளம் தன்னிடம் பல பொருளை வாரிச் செல்வதால், காண்பவர் அதனைக்கண்டு ஆவல்கொண்டு அப்பொருள்களை அடையவெண்ணி இறங்குவார். அஃதே போன்று, விலைமாதர்களும் தங்கள் தேகத்தை அணி, சாந்தம் முதலியனவற்றால் மினுக்கிக் காட்டுவர். அவர்களைக் கண்ட ஆடவர்கள் அவர்களை அடைய ஆவல்கொண்டு சென்றபின் மாழ்குவர்.

மேலும், ஆற்றுவெள்ளம் நிறைந்துபோகிற காலமே அழகாய்த் தோன்றும். வெள்ளம் வற்றியபின்னர் பலனற்று தோன்றும். அதையன்ன விலைமாதர்கள் தங்கள் அணியையும் இளமையையும் இழந்தபின்னர் கேவலமாய்த் தோன்றுவார். இவைகள் போன்ற பல விஷயங்களையும் இச்செய்யுள் காட்டுகின்றது. ஆகலான், பொருட்பெண்டிர் நேயத்தைக் கையாள்வதினும் ஆற்றுவெள்ளத்தில் வீழ்ந்துமடிவதுமேல். ஏனெனில், வெள்ளத்தில் ஆழ்ந்து இறப்பவன் சில நிமிஷங்கள்மட்டுமே துன்பத்தை அடைகிறான். பின்பு உயிர் நீங்கிவிடுகின்றது. வேசையர் வெள்ளமோ ஆளைக்கொல்லாது பொருள்களைப் பறித்து ஓட்டாண்டியாக்கி, வியாதி, அவமானம், நரகம் முதலிய கஷ்டங்களைத் தருகிறது. இதனால் பொருட்பெண்டிர்களின் சுகம் இன்பந்தருவன அல்ல என்பது விளங்குகின்றது.

(தொடரும்.) ப—ர்.

# கற்பு

பெண்களுக்குக் கற்பாவது, விவாகம் செய்யுமுன் பிதா மாதாக்களாலும், விவாகம் செய்தபின் கணவனாலும் கற்பிக்கப்பட்டபடியே நீதி வழுவாமல் ஒழுகுதலாம். பெண்கள் இளமைப் பருவத்திலே பிதாவினாலும், யௌவனத்திலே கணவனாலும், மூப்பிலே புத்திரனாலும், காக்கத்தக்கவர். ஆகையால், ஒருபோதும் பெண்கள் சுவாதீனரல்லர். கணவனும் புதல்வனும் இல்லாத மனைவியை அவளுடைய கணவன் பக்ஷத்தார் காக்கக்கடவர், அவர்கள் இல்லாதபோது அவளுடைய தாய் பக்ஷத்தார் காக்கக்கடவர், தகப்பன் கணவன் பிள்ளைகள் இவர்கள் இல்லாமல் தனித்திருக்க விரும்பும் பெண், பிறந்தகுலம், புகுந்தகுலம் இரண்டுக்கும் வசையை உண்டாக்கிவிடுவள். பிதா மாதாக்கள், பெண்ணுக்குச் சிறு பிராயத்திலே கடவுளுடைய குணமகிமைகளையும், புண்ணிய பாவங்களையும், சுவர்க்க நரக பலங்களையும், கடவுளை வழிபடு முறைமையையும், கணவனுக்குத் தொண்டுசெய்யும்படி முறைமையையும் கற்பித்து, வீட்டுவேலைகளைப் பழக்கல் வேண்டும், பெண்களுக்கு உரிய தருமங்களெல்லாவற்றுள்ளும் முக்கிய தருமம் பதிவிரதம், 'குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்' என்றார் பெரியோர். சூரியோதயத்துக்கு முன்னே நித்திரை விட்டெழுதல், கடவுளைத் தியானித்துத் துதித்தல், வீடு விளக்கஞ் செய்தல், பாத்திரசுத்தி செய்தல், தேவபூசைத் திரவியங்கள் அமைத்தல், மாமன் மாமியாரை வந்தித்தல், கணவனுடைய பணிவிடையைச் செய்தல் இவை முதலியனவெல்லாம் மங்கல வாழ்க்கையையும் செல்வத்தையும் விரும்பிய நன் மனைவியின் செய்கைகளாம். உரலிலேனும், உலக்கையிலேனும், அம்மியிலேனும், வாயிற்படியிலேனும், முறத்திலேனும் இருக்கலாகாது. இருந்தாற் சீதேவி நீங்குவள்.

நாடோறும் தன்னாயகன் உண்டபின் தான் உண்ணுதலும், அவன் சயனித்த பின் தான் சயனித்தலும், அவன் நித்திரை விட்டெழுவதற்கு முன்னே தான் நித்திரை விட்டெழுதலும் பதிவிரதைக்கு உரிய செய்கைகளாம். கணவன் கொடுத்த பொருளை வீணாகச் செலவழியாமையும், அவனுடைய வரவுக்கேற்பச் செலவழித்தலும், கடுஞ் சொல்லின்மையும், இன்சொற் சொல்லலும் அவள் செய்கைகளாம். பதிவிரதை தன் வீட்டுக்கு வரும் துறவிகள் முதலிய பெரியோர்களையும் அதிதிகளையும் உபசரித்து, அவர்களுக்கு அன்னங் கொடுத்தல் வேண்டும். குருடர், முடவர், வியாதியாளர், விருத்தர் முதலானவர்கள் வந்தால், முகமலர்ச்சியோடு இயன்றமட்டும் பிக்ஷை கொடுத்து, இனிய வார்த்தைகளைச் சொல்லி அனுப்பவேண்டும். யாவரோடும் இடி இடித்தது போலே உரத்த சத்தத்தோடு பேசலாகாது, இனிய குரலோடு மிருதுவாகப் பேசல் வேண்டும். நாயகனுடைய ஆயுள் பெருகும் பொருட்டு மஞ்சளணிதல் வேண்டும். தன்னாயகன் பெயரைச் சொல்லலாகாது. அவன் இருந்தாலன்றி அவனெதிரே தான் இருக்கலாகாது; அவனுடைய உச்சிட்டத்தை அமிர்தம் போலப் புசித்தல் வேண்டும். நாயகன் ஏவுமுன்னமே அவன் குறிப்பறிந்து நடத்தல் வேண்டும். தன்னாயகன் வீட்டுக்கு வரும் பொழுது அவனை முகமலர்ச்சியோடு எதிர் கொண்டு கை கால் கழுவச் சலங் கொடுத்து உபசரித்தல் வேண்டும். தகாத வார்த்தை பேசல், தலைக்கடையிலே நிற்றல், பலகணிவழியாகப் பார்த்தல், சிரித்தல், பகலிலே நித்திரை செய்தல், காரியம் செய்யாமை, ஆஞ்ஞையில்லாமல் வெளியே போதல், அயலாரோடு பேசுதல், பொதுப் பெண்கள் போலப் பார்த்தல், தம்மை அழகுபெற அலங்கரித்தல், கூத்து முதலியவைகளைப் பார்க்க விரும்புதல், கணைக்காலும் தனமுந்தெரிய ஆடை உடுத்தல், முதிர்ந்த வயசுடையவர் இல்லாத வீட்டுக்குப் போதல், கூட்டத்திலுள்ளே புன்னகை செய்தல், வேசை தூர்த்தை, கற்புநிலை கெட்டவள், மாயக்காரி இவர்களுடன் கூடுதல், கணவனை விட்டு அயலூருக்குப் போதல், கணவனை விட்டுத் தீர்த்த யாத்திரை முதலானவை செய்தல், தான் விரும்பிய இடத்திலே தூங்குதல், அயல் வீட்டில் இருத்தல் இவையெல்லாம் ஒழுக்கங் கெடுதற்கு ஏதுவாம். மனைவியானவள், தனக்கு ஈச்சுர சங்கற்பத்தினால் வாய்த்த கணவன் அழகில்லாதவனாயினும், நற்குணமில்லாதவனாயினும், வியாதியாளனாயினும், வறியவனாயினும், கல்வியில்லாதவனாயினும், வயோதிகனாயினும் அதனைச் சிறிதும் அவமதியாது நன்கு மதித்து வழிபடல் வேண்டும், இயன்ற மட்டும் தன் கணவனுக்குக் கோபம் பிறவாவண்ணம் நடக்க முயலல் வேண்டும். ஒருபோது கோபம் பிறந்தால் அதனைப் பொறுத்துக்கொண்டு முகமலர்ச்சி காட்டி, இன்சொற்களைச் சொல்லி அதனைத் தணித்தல் வேண்டும். ஒருபோது கணவன் அநீதியாகக் கோபித்துக் கண்டித்தாலும், தானும் கோபித்து எதிர் வார்த்தை பேசாது மௌனமாயிருந்து, இதமே பேசி அக்கோபத்தை ஆற்றல் வேண்டும். 'பெண்டிர்க் கழகெதிர் பேசாதிருத்தல்' என்று பெரியோர் விதித்திருக்கின்றார். மனைவியானவள் தன் கணவனுடைய குற்றங்களைப் பிறருக்குச் சொல்லலாகாது, 'தூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும்,' என்றார் ஒளவையார், கணவனுடைய துற்குணங்களைச் சொப்பனத்திலும் நினைக்கலாகாது, அவனுடைய நற்குண நற்செய்கைகளையே பாராட்டி அவனை மெய்யன்போடு உபசரித்தல் வேண்டும். மனைவியானவள் தன்னுடைய பிதா மாதாச் சகோதரர் முதலிய சுற்றத்தார்களெல்லாரிடத்திலும் பார்க்கத் தன்னாயகனிடத்தே மிக்க அன்புவைத்தொழுகல் வேண்டும். பதிவிரதையானவள் தான் தரித்த ஆபரணங்களெல்லாவற்றையும் துறந்திருந்தாலும், தன் மங்கலியத்தை மாத்

திரம் ஓ ரிமைப் பொழுதாயினும் அகன்றிருக்க மாட்டாள், அது போலவே, தன் பிதா மாதா முதலிய சுற்றத்தார்க ளெல்லாரையும் விட்டு நீங்கினும், தன்னாயகனை மாத்திரம் விட்டு நீங்காள். (மனைவியும் கணவனும் ஒருமைப்பட்டு மகிழ்ந்திருந்தால், குல முழுதும் மகிழ்ச்சி யடையும்) அதனாலே தருமம் பொருள் இன்பம் என்னும் மூன்று பயனும் உண்டாகும்.

பா—பா (மற்றவை மறுமுறை வெளிவரும்)

---

## பற்பல செய்தி

### கூச்பீகார் அரசாங்கம்

கூச்பீகார் அரசர் காலமாய் விட்டபடியால் மைனர் அரச குமாரருக்குக் கல்வி முதலியன பயில் விக்கவும், மற்றும் அரண்மனைக் காரியங்களைக் கவனிக்கவும் ஓர் மகம்மதிய கவர்னஸை நியமித்திருப்பதாயும், அவர் அரண்மனையில் சகல பாகங்களிலும் தடையின்றிப் புழங்குவதாயும், கிழத் தன்மை அல்லாத மகாராணியார் அவர்களிடமும், மகம்மதிய கவர்னஸ் அரசாங்க விஷயங்கள் காரணமாய் நேரே பேசுவதாகவும் அவ்வாறு ஓர் இந்து அரசாங்கத்திற்கு மகம்மதியரை அமர்த்தியிருப்பது தானென்னும் நாட்டு ஜனங்கள் பரபரப்புடன் முணு முணுக்கிறார்கள் என்று 'டெய்லி எக்ஸ்பிரஸ்' விரிக்கிறது.

### காரைக்குடி சிவனடியார் திருக்கூட்டம்

சித்திரைப் பிறந்து விட்டது. கிராமங்கள் தோறும் கிராம தேவதைகட்கும், மாரி, கருப்பன், ஐயனார் முதலிய தேவதைகட்கும் உலா நிகழ்த்தும் காலமும் தொடங்கிவிட்டது. அந்நான்று தேவதைகட்கு ஆடு, கோழி, பன்றி முதலிய நிரபராதியான பிராணிகளைப் பலியிடாது. பாற்பொங்கலிட்டு பரமன் திருவருளைப் பெற்று பல்லாண்டு வாழுங்கள்! என்று அன்புப் பிரசுர மூலமாகவும், வாயுரைமூலமாகவும், காரைக்குடிச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் கோருகின்றனர். அன்னார், உரையை வீணாக்காது போற்ற வேண்டுகின்றனம். காரைக்குடி 'குமரன்' பத்திராதிபர், உயர் திரு. சொ. முருகப்ப செட்டியார் அவர்கள் நாட்டரசன் கோட்டையில் வைகாசித் திங்கள் 6-ம் தின முதல் நடக்கப்போகிற ஸ்ரீ கண்ணுடைய நாயகியம்மன் உற்சவ காலத்தில் பல அரிய நீதிப் பிரசங்கங்கள் நிகழ்த்துவரென 'விகடன்' காற்றுத் தந்தி மூலமாய் கேள்விப்பட்டிருக்கிறான்.



### சிவகங்கை சோற்றுக்கடை.

சிவகங்கையில் ஓர் பிராமணன் சோற்றுக்கடையில் ஓர் நாள் ஓர் பிராமணரல்லாதான் சென்று சாப்பாடு கிடைக்குமாவென்றான். அதற்கு கடையைப் பரிபாலிப்போன் சாதம் கிடைக்கும், பிராமணர்களுக்கு ஆறணா, அல்லாதாருக்கு எழணா வென்றான். இஃதென்ன புதுமை! பிராமணர்களைக் காட்டிலும் அல்லாதார் வயிறு பெரிதோ? சில ரெயில்வே நிலயங்களின் வெள்ளையர்கட்கு வேறு கக்கூஸ், கருப்பர்கட்கு வேறு கக்கூஸ் என்று அமைத்திருப்பது போன்றல்லவா யிருக்கிறது.

### மதகுப்பட்டி சிவகங்கைப் பாதை.

மதகுப்பட்டியிலிருந்து சிவகங்கைக்கு வரும் (டிரங்ரோட்) கற்பாதை இருக்கும் சீர் கேட்டை சொல்லி முடியாது. கர்ப்ப ஸ்திரீ ஒருத்தி பிரசவிக்கமாட்டாது கஷ்டப்பட்டு அவளை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக வண்டியிலேற்றி அந்த ரோட்டில் சென்றால் இரண்டு மைல் தூரம் வருவதற்குள் சுகப்பிரசவமாய் விடும். மோட்டாரில் போனாலே குடல் குலுங்குகிறது என்றால் மாட்டு வண்டியில் போனால் எவ்வளவு சுகமாயிருக்கும். போர்டு உறுப்பினர் ஓட் கேட்கப்போகுந் தருணம் தவிர, மற்ற காலங்களில் இந்த பாதையில் வரும் வேலை இல்லைபோலும்.

### சங்கரர் விஜயம்.

சிருங்கேரி ஸ்ரீலஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் மதுரையில் விஜயம் செய்த காலத்தில் பிராம்மண போஜனம் செய்வித்தார். அஃது, ஸ்ரீ மீனாக்ஷிகோவில் பிரகாரத்திற்குள் ஆடிவீதி யென வழங்கும் பாகத்தில் நடைபெற்றது. அப்போது கோயிற் பிரகாரம் முடிய எச்சிலைகளே பறந்தன. சுவாமி தரிசனத்திற்கு போகும் பக்தர்கள் அந்த எச்சிலைகளை மிதித்துக்கொண்டே போக நேர்ந்தது. தவிர, சுவாமிகள் ஆலய தரிசனார்த்தம் சென்றபோது மிதியடியுடன் சென்றனராம். அடடா இஃதென்ன முறை! இனி மற்ற சப் சிடர்கள் பூனியாரத்துடன் கோயிலுக்குப் போவார்கள்போலும். இவையனைத்தும் நவீன நாகரீகமோ அல்லது என்ன நிமித்திற்கு காரணமோ தெரியவில்லை. அந்த விஷயத்தை லோகோபகாரியில் மதுரை நிருபர் ஒருவர் சாங்கோபாங்கமாய் எழுத்து மூலம் கதறியுள்ளார். பார்ப்பனர் அல்லாத மடாதிபதிகட்கு அவ்வாறு இடந்தர பலர்கள் முன் வருவார்களா?

### சிவகங்கை அரசரின் சிறந்த குணம்.

சிவகங்கையில் அரசருடைய மூலதனத்தால் ஓர் தரும சத்திரம் நடந்து வருகிறது. அதில் தினம் வரும் பிராமணர்களுக்கும், மற்றையர்களுக்கும் அன்னமிடுகிற வழக்கம். அதை நடத்துவதற்கு

ஓர் பிராமணரை ஏற்படுத்தியிருந்தனர். அப்பிராமணர் சரிவர நடத்தாது வரும் ஏழைகளுக்கு ஒவ்வாத உணவு படைப்பதாக வதந்தி உலாவிற்று. ஓர் நாள் அரசர் அதைச் சோதிக்க வெண்ணி, தான் ஓர் பயிராக்கிபோல வேடந்தாங்கி சத்திரம் சென்று அந்தணரை அன்னம் கேட்டார். அந்தணர், அரச பயிராக்கிக்கு கேடான அன்னம் சிறிது படைத்தார். அதை வாங்கிக்கொண்டு பயிராகி, குழம்பும் கறியும் கேட்டார். அந்தணர் அரசரை அதட்டி அன்னம் மட்டில் போதாதா போவென்றார். பயிராகி விட்டபாடில்லை. கடைசியில் வண்டலான ரசம் சிறிது படைக்கப்பட்டது. பயிராகி அதையும் சாதத்தையும் இலை இல்லாத வெறுந் துணியில் வாங்கிக்கொண்டு அந்தணரைப் பார்த்து, இந்தச்சோற்றை இச்சத்திரத்தின் திண்ணையில் வைத்துச் சாப்பிடுகிறேன் என்றார். அந்தணன் கூடாது; தெப்பக்குளத்துப் படியில்போய் சாப்பிடு என்றார். பயிராகி போய்விட்டார். மறுதினம் அந்தணனை அரசர் அழைத்து கடந்த இரவு சத்திரத்தில் என்ன சரி என்றார். ஏதேதோ செய்ததாகச் சொன்னார். பின்பு நடந்ததைக் கூறி பிராமணனை அவ்வூரில் இருக்க வேண்டாம் என்று அனுப்பிவிட்டார். இஃது, எவ்வளவு பெருமையான குணம என்பதை அறிவார்களாக. தற்காலமும் சில செட்டிப்பிள்ளைகள் வைத்திருக்கும் தரும சத்திரங்களில் ஷை மாதிரி சென்று பார்த்தால் வள்ளல் விசிதமாகும்.

### 1581 அலகுள்ள பேனாகத்தி.

இங்கிலாந்தில் ஓர் தொழிற் சாலையாரால் 1581 அலகுகள் கொண்ட பேனாகத்தியொன்று செய்திருக்கின்றாராம்.

### கோத்தமங்கலம்.

இவ்வூர் சிவன் கோயில் கும்பாபிஷேகம் சித்திரைமீ 16வ வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கானவர்கட்கு அன்னம் வழங்கப்பட்டது. அது சம்பந்தமான பலவித விசேடங்கள் நிகழ்ந்தனவாம்.

### ஓர் சந்தேகம்.

தனவணிகச் சீமான்களில் அநேகம் பேர், தம்மை நாடிவந்தவர்கட்கு தானம் முதலியவற்றை தங்களால் இயன்ற அளவு செய்கிறார்கள் என்றாலும், தம்மை நாடி வந்தவர்களை சாப்பிட்டீர்களா? அல்லது, சாப்பிடுவதற்கு வசதி செய்யவா? என்று மட்டில் கேட்காதிருக்கின்றனர். அது எதை முன்னிட்டோ தெரியவில்லை.

---



## அனுபவ வைத்தியக் குறிப்புகள்

### விரை வாதத்திற்கு

புகையிலையை நன்றாய் பிரித்து அதில் சுண்ணாம்பைத் தடவி நன்றாய் இடித்து பீஜத்தின்மீது கட்டினால் வாந்திவரும். பத்துவிசை வாந்தியெடுத்தால் விரைவீக்கம் குறையும். மோருஞ் சாதம் சாப்பிட வேண்டும்.

### கண் குளிர்ச்சிக்கு

நந்தியாவட்டை புஷ்பச்சாற்றைப் பிழிந்து எள் எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி ஸ்நானம் செய்யவும்; ஷை எண்ணெயை கண்ணிற்கும் விடவும்.

### ஷை இரண்டாவது

வில்வப்பழத்தை உடைத்து அதனுள் இருக்கும் பிசினை எடுத்து தலையில் தேய்த்து 15-நிமிஷம், பொறுத்து ஸ்நானம் செய்யவும்.

### கபத்திற்கு

தினம் காலையில் எழுந்தவுடன் துளசிச்செடியின் இலையில் சுமார் பத்துக்கொத்து சாப்பிட்டுவர கபம் அண்டாது.

### தொண்டை கம்மலுக்கு

பூவரசம் பழுப்பைக் கொண்டு வந்து ஓர் புதுச் சட்டியில் போட்டுக் கருக்கி, அந்தத் தூளுடன் தேனைச் சேர்த்துக் குழைத்து காலணா எடை யுண்ணவும். நாலு வேளை உண்டால் கம்மல் நீங்கும். இது சங்கீதம் பாடுபவர்கட்கும், காலக்ஷேபம் செய்பவர்கட்கும் அனுகூலம்.

### நீரிழிவுக்குக் காப்பி

இலுப்பை மரத்தின் பட்டையை வெட்டி வந்து நன்றாய் உலர்த்தி இடித்து வைத்துக்கொண்டு, வெந்நீரில் போட்டு நன்றாய்க் காய்ச்சி வடிகட்டி எடுத்துக் கொண்டு, பாலும் சர்க்கரையும் சேர்த்து சாப்பிட நீரிழிவு குணமாகும்.

### நாய் கடிக்கு

நாய் கடித்த உடன் அவ்விடத்தைச் சுட்டுப் புண்ணாக்கிவிட்டு, மறுதினம் நல்ல பேதி மருந்தாய் பேதிக்குச் சாப்பிடவும் விஷம் ஏறாது ஊறாது.

# “ஆனந்த விகடன்”

## வாழ்த்துப்பா.

இஃது

நாட்டரசன் கோட்டை தனவணிகர் மரபு பரோபகாரி

அ. சொ. ராம. ராமநாதன் செட்டியார் கூறியது.

விருத்தம்

சீர்மலியுஞ் சென்னையிலின் றேவிகடப் பசுந்தேனைச்
செவியி லூட்டி
யார்மனதுங் களிக்கசெயும் “ஆனந்த விகட”னெனும்
ஆற்றல் சான்ற
ஓர்மாதச் சஞ்சிகையு மதன்குருவா யிருந்துபல
உரைகள் தீட்டும்
பேர்வைத்திய நாதனுங்கோ விந்தராஜனும் பல்லாண்டு
பெரிதும் வாழ்க.

கணம் ஐயா!

ஆனந்த விகடன் பத்திரிகையில் வரும் வியாசங்கள் சகலருடைய மனதையுங் களிக்கச்செய்து அறிவையும் ஊட்டுகிறதாகலின் அஃது நீண்டகாலம் தழைத்து ஓங்கக் கடவுளை வேண்டுகின்றனம்.

அ. சொ. ராம. ராமநாதன்.

---

## கதருடைக் கண்ணியம்.

அணியுங் கதரே ஆக்கந் தருநிதி
ஆதியில் இந்தியர் அழகுற செய்தனர்
இந்தியர் கதரை இயற்றிடில் நன்றும்
ஈகையும் தருமமும் இக்கதர் தருமே
உலகில் கதரே உடுக்கும் துகிலாம்
ஊக்கமாய்க் கதரை உடுத்தால் நலந்தரும்
என்றுங் கதரை இயற்ற முன்வா
ஏக்கந் தன்னை எடுக்குங் கதருடை
ஐயமின்றி அழகினைக் கதர் தரும்
ஒவ்வொரு நாளும் ஒருபலம் நூல்செய்
ஓயாது நூற்போர் ஒப்பிலாப் பலனுறும்
ஔவியம் கொண்டோர் அகற்றுவர் கதரை



கதரினை யுடுப்போர் கண்ணிய முறுவர்
காவிச் சாமிகள் கதர்கொளல் நீதி
கதர்கொளுந் தேகம் கவின்பெறு மிகவே
இராட்டையில் நூற்று இயற்றுவாய் கதரினை
நம்நாட்டுப் பஞ்சே நாமணி கதராம்
அன்னிய ஆடையே ஆக்கம் குறைக்கும்
காந்தி மகானும் கதரையே புகழ்கிறார்
சீனு வாசனும் சீமான் புகழ்வதும்
ஊழியன் நித்தம் உரைப்பதுங் கதரையே
ஆகலின் நம்மவர் ஆற்றலாய் நித்தமும்
கதரைப் போற்றுமின் கதரைப் போற்றுமின்
இந்தியர் வறுமை இன்றே ஒழியவும்
நம்மூர்ப் பஞ்சால் நம்மினர் பிழைக்கவும்
கதரைப் போற்றுமின் கதரைப் போற்றுமின்.

---

## காணக்கிடைத்ததின் கருத்துரை.

தொழிலாசிரியன்:—இந் நாமங்கொண்ட சஞ்சிகையொன்றைக் கண்டாம். அஃது, பலவகைத் தொழில்களின் செய்முறையை விரித்துள்ளது. நம்மினர்க்கு இன்றியமையாத பொருள்களை, பெருந்தனம் தந்து அன்னியநாட்டார்களிடம் பெற்று வறுமைப்படும் நம்மவர்கள், இம் முறைகளின் போதனையால் பற்பல தொழில்களைக் கற்று, பல பொருள்களைச் செய்துகொள்ள அனுகூலமாகும் என்பது நமது துணிபு. இதன் ஆசிரியர் மிகச் சமர்த்தர் என்பது நன்கு புலனாகின்றது.

வருடச் சந்தா ரூ. 2 0 0

விலாசம்:— தொழிலாசிரியன் ஆபீஸ், சிவகங்கை.

---

தாருல் இஸ்லாம்:—என்னும் பெயர்புனைந்த மாதச் சஞ்சிகை உயர்ந்த கடிதத்தில் மிக அமைப்பாய் அச்சிடப்பட்டிருப்பதுந் தவிர, உள்ளடக்க விஷயங்களோ பெரிதும் போற்றத்தகுந் தன்மைத்து. இஸ்லாம்மார்க்கத்தின் முன்னேற்றத்தைத் தழுவியது என்றுமட்டில் கூறுது, பொதுவாகப் பலருக்கும் பயன்படும் வியாசங்கள் பலவினை மேற்கொண்டொளிர்கின்றதென்பது மிகை யாகாது. வருடச் சந்தா ரூ. 3 0 0

விலாசம்:— தாருல் இஸ்லாம் ஆபீஸ், பிராட்வே-சென்னை.

---

லோகோபகாரி :— இஃது, ஒரு வாரப் பத்திரிகை. இதன் தலைப்பெயருக்கொப்ப பல ஞான விடயங்களையும் தேசிய விடயங்களையும் உபகரித்துவருகின்றது. சென்னையினின்று வெளிவரும் பழமையான பத்திரிகைகளில் இஃதும் ஒன்றே. தமிழினுடையவும், ஞானத்தினுடையவும் வளர்ச்சியை விரும்புவோர் இதனை வாசித்தல் மிக அவசியம்.

வருடச் சந்தா ரூ. 4 0 0

விலாசம் :— லோகோபகாரி ஆபீஸ்,
கோமளீச்சுவரன் பேட்டை, சென்னை.

---

## முத்தாம்பாள்

அல்லது

## மோகன வடிவு.

(119-வது பக்கத் தொடர்ச்சி.)

உமாபதி வந்தவளைப் பார்த்து, நங்காய், நான் எனது எண்ணத்தை உன்னிடம் கூறியும் நீ அறிந்துகொள்ளாது உனது பாடத்தையே படிக்கிறாய். நான் கோரிய மாது பிறிதொருவனை மணம் செய்ய அவள் மனப்பூர்வமாகச் சம்மதியாள். அப்படி அவள் சம்மதத்தைக் கோராது அவளின் தந்தையார் முதலானோர் அன்னியர்க்கு மணம் செய்விக்க முன்வரின் அவள் தனதுடலை மாற்றிக்கொள்ளுவாள். அஃதும் இன்றி, வேறு நாயகனை அவள் மணந்தாள் என்று நான் கேட்டதும் எனதுயிரை அவளது சொல் தவறியமைக்கு அற்பணம் செய்துவிடுவேன். பின்பு அரைக்கணமும் உயிர் வாழேன். இஃதே என் முடிவான வார்த்தை ஆதலால், நீ இனி என்னிடம் வேறு விஷயங்களைப் பேசி மனதைப் புண்படுத்தாது செல்வாய். நான் தனியாயிருந்து என் காதலியாள் குணத்தைப்பற்றி சிந்திக்க ஆவல் கொள்ளுகிறேன். சதா அவள் உருவம் என் முன் தோன்றுகிறது. அவள் கூறிய சில வார்த்தைகள் என் மனதை விட்டகலவில்லை. ஆகையால், அவளுடைய சிந்தையன்றி வேறு சிந்தையும் என் மனத்தில் தங்காது. நீ போய்வா? தயவு செய்து போ. இனி, நீ இங்கு தங்குவையேல் என் காதலியைப்பற்றி நான் நினைக்கத் தடையாகிறது. போ! போ!

வந்தவள் :— அன்ப! அடியாள் இன்னும் ஒரே வாக்கியம் மட்டில் தங்களுடன் பேச அனுமதி தரவேண்டும். அதாவது, தாங்கள் காதலித்த மாதைத் தாங்கள் சதா மறவாது இருப்பது உண்மையாயின் அவள் உருவத்தைத் தங்கள் மனதில் பதியவைத்திருப்பீர்கள். மேலும், அன்னாள் குரலும் தங்கள் செவியில் அடங்கி யிருக்கும். இஃது உண்மை. ஆனால், தாங்கள் அம்மாதை தற்காலம் காண நேரிட்டால் சந்தேகமின்றி அடையாளம் தெரிந்து கொள்ள முடியுமோ?

உமாபதி :— ஆகா! தெரிந்துகொள்வேன். இதோ என்முன் அவளின் உருவம் நிற்கிறதே! தலைசாய்ந்த வண்ணம் நிற்கிறதே! அழகிய முகம் கம்பீரமான பார்வையுடன் விளங்குகின்றதே! கட்டாயம் அடையாளம் கண்டு பிடிப்பேன்.

வந்தவள் :— நாதா! தாங்கள் காதலித்தவளும், தங்களைக் காதலித்தவளுமாகிய "முத்தாம்பாள்" என்பவள் நானே என்றாள்.

அதைக் கேட்டதும், உமாபதி அளவிறந்த சந்தோஷத்தால் படுக்கையிற் சாய்ந்து, சுமார் பத்து நிமிடம் வரையில் ஒன்றுந் தோன்றாது மூர்ச்சித்த வண்ணமிருந்தான். முத்தாம்பாள் செய்த உபசாரத்தால் சோகம் நீங்கிய உமாபதி முத்தாம்பாளை அங்கிருந்த நாற்காலியில் உட்காரச் செய்து, கண்ணே! என்னைச் சோதிக்க வந்த கற்பகமே! என்மாட்டுச் சந்தேகம் கொண்டாயோ? அல்லது, உன்னை யன்றி பிறிதொரு மாதை மணப்பேனென்றெண்ணினையோ? உன்னை நான் சிறிதும் அறிந்து கொள்ளாவண்ணம் மாறுருவமைத்து வந்து என்னை பற்பல கேள்விகளினால் சோதித்தாயே. இப்போதாவது எனது மனம் இன்ன தன்மையில் இருக்கிறதென்று அறிந்து கொண்டாயா? இனி நாம் செய்யவேண்டியதென்ன? நமது திருமணத்தை நின் றந்தையார் உடனிருந்து ஒத்து நடத்துவாரா? அன்று தடுப்பாரா? தெரியவில்லை. அவ்வாறு ஏற்றுக்கொண்டால் நம்மிருவர் வாழ்நாட்கள் புண்ணியர்களின் வாழ்நாட்களை ஒப்பும். அன்றேல், நம்மினும் கேடான நிலைமையை உடையவர் இவ்வுலகில் பிறர் இரார் என்பது திண்ணம். இனி உன் எண்ணங்களை வெளியிடு என்று கூறினான்.

சில நிமிஷங்கள் வரையில் உமாபதி பேசியதின் கருத்தை அறிந்த முத்தாம்பாள், கரும்பினுமினிய காதலரே! இன்று நான்

---

கனகராம்

அல்லது

கமலாம்பாள்

ஓர் அதியற்புத சிங்கார ரசம் பொருந்திய நாவல் அச்சாகி வருகிறது. விலை ரூபா 1 0 0

ஆனந்தவிகடன் ஆபீஸ், சென்னை.

இவ்விடம் வந்தது வியாதிப்பட்டிருக்கும் தங்களின் தேக நிலைமையைப் பார்ப்பதற்கே. தங்களின் ஆண்மையையும், வீரத்தையும் அனைவரும் கூறக் கேட்ட என் மனம் எத்தனை குதூகலத்தை அடைந்திருக்கவேண்டும் என்பதை நான் கூறாமலே தாங்கள் தெரிந்துகொள்ளலாம். தாங்கள் கள்வர் கூட்டத்தாரால் காயம்பட்டு வைத்தியர் சிகிச்சையில் இருப்பதையும், தினம் தினம் குணமான குறிகள் காண்கின்றதென்று வைத்தியர்கள் கூறுவதையும் என் தகப்பனார் தங்களிடம் மிகப் பிரியம் கொண்டு ஜமீன் இலாகாவில் தங்கட்கு உயர்தர, உத்தியோகப் பதவி தர எண்ணியிருப்பதையும் நான் ஒன்று விடாமல் கேள்விப்படுகிறேன். நான் தெரிந்து கொண்ட அளவு தாங்கள் அறிந்திருக்கமாட்டீர்கள். நான் அன்று தங்களைப் பார்த்தபின்பு மறுபடி காணுங்காலம் கிடைக்காமலிருந்தது. இன்று தங்களைக் காணவேணும் என்கிற ஆவலால் நான் வேற்றுருக்கொண்டு வந்தேன். பூப்படைந்து கன்னிகா மடத்திலிருக்கும் நான், இரவில் தங்கள் இருப்பிடம் வந்து காணுவதை பிறர் அறிந்தால் பழிப்பு கூறுவர். அஃது, எனக்கும் என் குடும்பத்தார்கட்கும் பெருங் குறைவைத் தரும். ஆதலால், வேற்றுருக் கொண்டு வந்தேன். ஆனாலும், தாங்கள் என்னை எப்படியும் தெரிந்துகொள்வீர்கள் என்று எண்ணினேன். தாங்கள் அறிந்து கொள்ளாமையால், என்னைத் தாங்கள் அறியுமட்டும் என்னை மறைத்தே இருந்தேன். மேலும், தாங்கள் என்னவித எண்ணத்தை என்பால் வைத்துள்ளீர் என்பதையும் அறியவே அவ்வாறு செய்தேன். பின்பு, என்னை தாங்கள் சிறிதும் தெரிந்து கொள்ளாமையால் நானே கூறினேன். சில நாழிகை என்னைக் காட்டிக் கொள்ளாதிருந்ததற்காகத் தாங்கள் என்னை மன்னிக்கவும். நான் வந்து மிக நேரம் ஆய்விட்டது. யாராவது தெரிந்து கொள்ளா முன்னம் நான் இவ்விடம் விட்டு அகலவேண்டும், எனக்கு உத்தரவு தாருங்கள் என்றாள். உமாபதி, மறுபடி சிறிது நேரம் முத்தாம்பாளின் முகத்தை உற்று நோக்கி பிரியாமனதுடன் உத்தரவு தந்தான். முத்தாம்பாளும் பிரிய மனமின்றியே பிரிந்தாள். அப்போது மணி இரவு பன்னிரண்டிருக்கலாம். முத்தாம்பாள் தன் அறைக்குட் போய் சயனித்துக்கொண்டாள். உமாபதியோ தன் அறையில் இருந்தபடியே பலவிதமான எண்ணங்களை எண்ணிய வண்ணம் நித்திரை போய்விட்டான்.

## "காதலுக்குக் குந்தகம்"

வேள்குறிச்சிக்கு அடுத்த மயிலே என்று ஓர் சிறு கிராமம் உண்டு. அதில் ஓர் பெரிய மிராசுதாரர் இருந்தார். அவர் பெயர் சத்தியநாதம் பிள்ளை அவருக்கு ஓர் மகன் இருந்தான். அவன் பெயர் கோபாலசாமி. கோபாலசாமிக்கு வயது முப்பது ஆகின்

160884



[illegible] பார்வைக்கு [illegible] கட்டிவிட்டிருக்குமேதவிர, முகம் மிகுந்த [illegible] சிறு வயதில் மாதர் விளையாட்டால், [illegible] வெகு குறைந்தவன். அவனுக்கு அவன் தகப்பனார் இறந்து போகும்போது சுமார் ஒரு லட்ச ரூபாய் சொத்து இருந்தது. அதில் கோபாலசாமி தீயவிஷயங்களிற் செலவிட்டு ஐம்பதினாயிரம் ரூபாயை அழித்துவிட்டான். கல்வி குறைவு, நல்ல சகவாசம் கிடையாது, அன்னியர்க்குத் தீங்கிழைப்பதில் மிக உற்சாகம் கொண்டவன். இவ்வாறான பெயர்வழி, வேள்குறிச்சி ஜமீன்தாரருக்கு சுற்றத்தான். அவன் நமது முத்தாம்பாள் மீது நாட்டம் வைத்திருந்தான். ஆயினும், தனது எண்ணம் முடியாது என்று நேரில் போய் கேட்க அஞ்சியிருந்தான். அவன் எவ்விதத்திலும் முத்தாம்பாளை மணக்கவேண்டும் என்று எண்ணிப் பலவித சூழ்ச்சிகளெல்லாம் செய்துவந்தான். அநேகப் பசப்புப் பேர்வழியான மந்திரவாதிகளிடம் வசிய மை வாங்குவான். இரட்சைகள் எழுதி வாங்குவான். பலவிதமான மருந்துகள் செய்வான். இப்படி யிருக்கும் நாளில், உமாபதியினிடம் வேள்குறிச்சி ஜமீன்தார் பட்சமா யிருப்பதைக் கேள்வியுற்றான். ஒருக்கால் முத்தாம்பாளை உமாபதிக்குத் திருமணம் செய்விப்பாரோவென்று எண்ணினான். ஆதலால், எவ்விதயாவது உமாபதிக்கும் வேள்குறிச்சி ஜமீன்தாரருக்கும் துவேஷம் உண்டுபண்ண எண்ணப்பட்டான்.

(தொடரும்)

---

## ஆனந்த விகடன் பங்குனிமீ பரிசு பெற்றவர்.

சிவகங்கை தாலூக்கா ஒக்கூர் நவைனக மாபு ஸ்ரீமான் வீர. ராம. ராம. நடராஜன் செட்டியார் நடுவெழுத்தலங்காரத்திற்கு விடை எழுதி யிருக்கின்றனர். அஃது மிக அருமையாயிருக்கிறது. அவரே பரிசைப் பெற்றார்.

### விவரம்.

| | | |
|---|---|---|
| 1. | அலகைதனக் கொருநாம மான பேர் | பிசாசு |
| 2. | அருச்சுனன்முன் செய்ததொரு தொழிலின் பேர் | சாரதி |
| 3. | இலகுசிக மார்பிலணி பணியான பேர் | மதாணி |
| 4. | இரவிக்குத் தீங்கிழைக்கு மொன்றின் பேர் | பாம்பு |
| 5. | உலகனைத்தும் சேதிதரு மொன்றின் பேர் | தபால் |
| 6. | உத்தமர்க்கு உதவாத மதுவின் பேர் | கள்ளு |

டை. ஆறு பதத்தின் நடுவெழுத்துகளைச் சேர்த்தால் "சாரதாம்பாள்" என்றாகிறது.

இதுவே நடராஜன் செட்டியார் எழுதி அனுப்பியது. நமது கொள்கையும் அதுவே ஆதலால் பரிசை அன்னாருக்குத் தரப்பட்டது. ப—ர்.

“ஆனந்தவிகடன்” பஞ்சாங்கம்

அக்ஷய௵ வைகாசி௴ கலியுகாதி 5028—சாலிவாகனம் 1849
பசலி 1335—கோல்லமாண்டு 1101—ஹிஜிரி 1344
இங்கிலீஷ் 1926௵ மே-ஜூன்௴
ஆனந்த விகடன் வருடம் 1.

| வைகாசி | மே | வாரம் | திதி | நக்ஷத்திரம் | அமிர்தாதி யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | வெ | திரி54-0 | மிரு53-30 | சித்60 | அக்ஷய திரிதியை, பலராம ஜயந்தி |
| 2 | 15 | சனி | சது55-45 | திரு57-25 | சித்60 | மாச சதுர்த்தி விரதம் [ண |
| 3 | 16 | ஞாயி | பஞ்59-40 | புன60 | சித்60 | வியாதியஸ்தர்மருந் துண்ண |
| 4 | 17 | திங் | சஷ்60 | புன2-50 | அ2-50சி | கிருத்திகைஸ்பிருக், சஷ்டி |
| 5 | 18 | செ | சஷ்4-0 | பூசம்9-40 | சித்60 | கங்கா சப்தமி |
| 6 | 19 | புத | சப்10-45 | ஆயி17-5 | சித்60 | நவக்கிரக சாந்திசெய்ய |
| 7 | 20 | வி | அ16-55 | மக24-40 | அ24-40சி | யாத்திரைவிலக்க |
| 8 | 21 | வெ | நவ22-40 | பூரம்31-40 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 9 | 22 | சனி | தச27-28 | உத்37-45 | மர60 | மரண யோகம் |
| 10 | 23 | ஞாயி | ஏ30-50 | அஸ்42-28 | அ42-28சி | சர்வ மத்ம ஏகாதசி |
| 11 | 24 | திங் | து32-38. | சித்45-40 | பி45-40அ | சுபகாரியம் விலக்க |
| 12 | 25 | செ | திர32-53 | சுவா47-13 | சி47-13ம | பிரதோஷம் |
| 13 | 26 | புத | சது31-33 | விசா47-20 | சித்60 | நரசிம்மஜயந்தி |
| 14 | 27 | வி | ○28-55 | அனு46-10 | சி46-10பி | பௌர்ணமி, சம்பத்கௌரி |
| 15 | 28 | வெ | பிர25-8 | கேட்44-0 | ம44-0அ | கத்திரி முடிவு [விரதம் |
| 16 | 29 | சனி | து20-28 | மூலம்41-5 | சித்60 | |
| 17 | 30 | ஞாயி | திரி15-23 | பூரா37-40 | சி37-40அ | |
| 18 | 31 | திங் | சது9-45 | உத்34-0 | ம34-0அ | |
| 19 | 1 | செ | பஞ்4-0 சஷ்58-15 | திரு30-13 | சித்60 | |
| 20 | 1926 ௵ ஜூன் 2 | புத | சப்52-35 | அவி26-23 | பி26-43சி | |
| 21 | 3 | வி | அ47-5 | ச22-43 | ம22-43சி | |
| 22 | 4 | வெ | நவ41-50 | பூ19-23 | சித்60 | |
| 23 | 5 | சனி | தச37-3 | உத்16-20 | சி16-20ம | |
| 24 | 6 | ஞாயி | ஏ32-50 | ரே13-50 | அ13-50சி | |
| 25 | 7 | திங் | து29-18 | அஸ்11-58 | சித்60 | பிரதோஷம் |
| 26 | 8 | செ | திர26-35 | பர*10-53 | சித்60 | கிருத்திகை விரதம் |
| 27 | 9 | புத | சது25-10 | கிரு10-53 | அ10-53சி | போதாயன அமாவாசை |
| 28 | 10 | வி | ●24-43 | ரோ13-33 | அமி60 | அவமாகம், அமாவாசை |
| 29 | 11 | வெ | பிர25-43 | மிரு14-33 | சித்60 | சந்திரதெரிசனம் உற்றுப் [பார்க்கவும் |
| 30 | 12 | சனி | துதி28-8 | திரு18-15 | சித்60 | களஞ்சியம் வைக்க |
| 31 | 13 | ஞாயி | திரி31-35 | புன23-28 | சித்60 | சேக்கிழார் சுவாமிகள் திருநட்சத்திரம் |
| 32 | 14 | திங் | சது36-8 | பூச29-43 | சித்60 | மாசசதுர்த்திவிரதம் |

| சுக் | புத | குரு | ராகு |
|---|---|---|---|
| குரு செ | 2௳ துலா-ச<br>13,, ரிஷ-புத<br>14,, மே-சுக்<br>22,, மீன-செ<br>26,, மிது-புத | | |
| கே | சனி | | |

26

# கோவிந்தராஜுலு நாயுடு

சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை.

## இனிய தமிழ் நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| தனபாலன் | 2 | 0 | விஜயசுந்தரம் | 2 | 0 |
| சித்திரரேகை | 1 | 8 | கமலாக்ஷி | 1 | 12 |
| பத்மரேகை | 1 | 4 | ஞானாம்பிகை | 1 | 8 |
| ஆத்மநாதன் | 0 | 12 | இரத்தினபுரி ரகஸ்யம் | 4 | 0 |
| பாதாளவாசி | 0 | 6 | அமராவதி | 4 | 0 |
| இன்பவல்லி | 0 | 3 | கனகபூஷணம் | 3 | 8 |
| கனகாங்கி | 2 | 0 | மாண்டிகிருஸ்டோ | 3 | 0 |
| சதானந்தர் | 1 | 4 | லண்டன் திருடர்கள் | 2 | 12 |
| மதிமுகி | 0 | 8 | வித்யாசாகரர் | 1 | 4 |
| ஏகம்பஞ்சநதம் | 0 | 10 | வஸந்தகோகிலம் | 1 | 0 |
| கலாசுந்தரி | 0 | 12 | ராஜேந்திரமோஹனு | 0 | 12 |
| திருக்கழுக்குன்றத் தக்கொலை | 1 | 8 | மாயசுந்தரி | 0 | 12 |
| பத்மாக்ஷி | 2 | 0 | காளிங்கராயன்கோட்டை | 4 | 0 |
| வீரகேசரி | 1 | 12 | விலாஸவதி | 3 | 0 |
| வஸந்தா | 1 | 12 | பூர்ணசந்திரோதயம் | 7 | 8 |
| அமரநாதன் | 1 | 4 | ஞானப்பிரகாசம் | 1 | 8 |
| குமுதரஞ்சனி | 0 | 12 | ஞானசம்பந்தம் | 1 | 4 |
| கனகமணி | 2 | 12 | சிவஞானம் | 1 | 4 |
| அமிர்தசாகரன் | 1 | 4 | உமார்பாக்ஷா | 4 | 12 |
| அமிர்தகுமாரி | 1 | 4 | இந்திராபாய் | 2 | 8 |
| ஆனந்தமகேந்திரன் | 1 | 0 | வாதசுந்திரம் | 2 | 0 |
| சரோஜினி | 2 | 0 | அம்புஜாக்ஷி | 2 | 0 |
| ராஜாராஜேஸ்வரி | 1 | 8 | அயாஷா | 1 | 12 |
| நாகபூஷணம் | 0 | 12 | கமலசேகரன் | 1 | 12 |
| மதனகல்யாணி | 4 | 8 | மதனகாந்தி | 1 | 8 |
| திகம்பரசாமியார் | 3 | 0 | மின்சாரமாயவன் | 1 | 8 |
| மேனகா | 3 | 0 | மஞ்சள் அறை மர்மம் | 1 | 8 |
| கனகாம்புஜம் | 2 | 12 | அந்தப்புரக் காதல் | 1 | 4 |
| பாலாமணி | 2 | 8 | குலசேகரன் | 1 | 0 |
| வசந்தமல்லிகா | 1 | 8 | மதனபூஷணம் | 1 | 0 |
| சௌந்திரகோகிலம் | 1 | 8 | தினகரசுந்தரி | 1 | 0 |
| ச. மகேந்திரன் | 1 | 8 | புஷ்பபவனம் | 0 | 14 |

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| பத்மாஸனி | 0 | 14 | தேவசுந்தரி | 1 | 4 |
| மங்கையர்காசி | 0 | 12 | இந்திராணி | 1 | 4 |
| பத்மலோசனி | 0 | 12 | இரங்கநாயகி | 1 | 4 |
| வீரநாதன் | 0 | 12 | விளையாட்டு சாமான் | 1 | 6 |
| சுவர்ணாம்பாள் | 0 | 12 | லோகநாயகி | 1 | 0 |
| குணசுந்தரன் | 0 | 12 | சம்பந்தமூர்த்தி | 0 | 7 |
| சோஹர்ஜான் | 0 | 10 | ஸ்ரீனிவாசன் | 0 | 6 |
| பூங்கோதை | 0 | 10 | தேவராஜு | 0 | 6 |
| பத்மநிதி | 0 | 10 | அம்பலவாணன் | 1 | 0 |
| கற்பகசுந்தரி | 2 | 12 | மாணிக்கவல்லி | 1 | 0 |
| ஞான செல்வாம்பாள் | 6 | 0 | அங்கயர்கண்ணி | 1 | 12 |
| பவளத்தீவு | 3 | 0 | ஏமகாதகன் | 0 | 8 |
| வல்லபனுச்சியார் | 1 | 4 | மிஸ்டர் தடிராமன் | 0 | 6 |
| மதனாம்பாள் | 3 | 0 | அண்டப்புளுகன் | 0 | 8 |
| கமலநாதன் | 1 | 8 | கணவனின் கடமை | 0 | 4 |
| சுந்தர்சிங் | 1 | 8 | நவீன ஸ்வர்ண ஒப்பாரி | 0 | 5 |
| இந்திரஜித்தன் | 1 | 4 | மாமியின் துயரம் | 0 | 2 |

## பலவித புத்தகங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விநோதரசமஞ்சரி கினேஸ் | 2 | 0 | பதினெண்சித்தர் ஞானக்கோர்வை | 1 | 0 |
| ,, திக்கு | 1 | 8 | 200 சில்லரைக்கட்டம் | 1 | 8 |
| நாலாயிரப் பிரபந்தம் | 4 | 0 | விவேகசிந்தாமணி உரை | 0 | 2 |
| அருணாசல புராணம் படத்துடன் பாட்டு உரை | 1 | 8 | இராமலிங்கசுவாமி திருவருட்பா 6 திருமுறை | 4 | 0 |
| தனிப்பாடற்றிரட்டு பாட்டு | 1 | 0 | ஸ்ரீபாலபக்த விஜயம் | 0 | 12 |
| ,, பாட்டு உரை | 2 | 8 | ஸ்ரீ மகாபக்த விஜயம் தி தாசன் சரித்திரம் படத்துடன் | 1 | 4 |
| ,, 2-ம்பாகம் பாட்டு உரை | 2 | 8 | ,, இரண்டாம் பாகம் | 2 | 8 |
| பாலகாண்டம் பாட்டு உரை | 4 | 0 | 3-வது 4-வது பாகம் | 3 | 0 |
| அயோத்தியாகாண்டம் உரை | 4 | 0 | கம்ப இராமாயண வசனம் | 6 | 0 |
| ஆரணியகாண்டம் உரை | 4 | 0 | 2-வால்யூம் | 3 | 0 |
| சுந்தரகாண்டம் உரை | 4 | 0 | மட்டும் ஒரே கட்டடம் | | |
| திருக்குறள் உரை | 3 | 0 | ஸ்ரீ மகாபாரதவசனம் 4 வால் | 8 | 0 |
| மஸ்தான் சாகிபு பாடல் | 1 | 0 | கருடபுராண வசனம் | 0 | 10 |
| சரீரமர்ம சாஸ்திரம் | 1 | 0 | திருவிளையாடற் புராண வசனம் படங்களுடன் | 1 | 8 |
| தாயுமானசுவாமி பாடல் | 1 | 0 | விநாயகபுராண வசனம் | 4 | 0 |
| ,, உரை | 3 | 4 | பெரியபுராண வசனம் படங்களுடன் | 1 | 8 |
| பட்டினத்தார் பாடல், புலம்பல், பத்திரகிரியார் புலம்பல், மூலமும் உரை | 1 | 8 | | | |
| பட்டணத்தார் பாடல் உரை | 2 | 8 | | | |





| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| பகவத்கீதை வசனம் | 1 | 8 | ஜாதக அலங்காரம் மூலம் | 0 | 12 |
| ,, பாக்கெட் சயிஸ் | 0 | 8 | ,, உரையுடன் | 1 | 8 |
| அறப்பளீசுரசதக உரையுடன் | 1 | 0 | சோதிட பாலபாடம் | 0 | 12 |
| ,, மூலம் | 0 | 2 | சுந்தரசேகரம் | 0 | 12 |
| குமரேசசதகம் உரையுடன் | 1 | 0 | வீமேசுரஉள்ளமுடையான் | 1 | 0 |
| ,, மூலம் | 0 | 2 | ,, 2-ம் பாகம் | 1 | 0 |
| நளவீம பாகசாஸ்திரம் | 1 | 0 | வீமகவி பாட்டு | 0 | 12 |
| பாலிகா பூஷணம் | 0 | 2 | ,, உரை | 1 | 0 |
| சீதா கல்யாணப்பாட்டு | 0 | 4 | போகர் 7000 | 4 | 0 |
| மருமக்கள் துயரம் | 0 | 2 | கைமுறை பாக்கெட்வைத்தியம் | 0 | 12 |
| கோலபுஸ்தகம் | 0 | 4 | பதார்த்தகுண சிந்தாமணி | 1 | 4 |
| பதிவிரதைகள் சரித்திரம் | 1 | 0 | 18 சித்தர் சில்லரைக்கோவை | 1 | 4 |
| இங்கிலீஷ் ஆசான் | 2 | 0 | ஞானவெட்டி பாட்டு | 1 | 0 |
| ஆங்கில போதகன் | 2 | 0 | ,, உரை | 2 | 8 |
| ஆனந்த ஆங்கிலபாஷா போதினி | 1 | 12 | ஆத்ம ரக்ஷாமிர்தமென்னும் வைத்திய சாரசங்கிரகம் | 1 | 4 |
| விருத்த பஞ்சபட்சி | 0 | 12 | ,, திக்கு | 2 | 0 |
| பெரிய சப்தரிஷி வாக்கியம் 5500 பாடல் | 3 | 0 | 18 சித்தர் நாடிசாஸ்திரம் | 1 | 0 |
| பெரிய வருஷாதிநூல் | 0 | 8 | மெஸ்மெரிசம் | 0 | 6 |
| சின்ன வருஷாதி நூல் | 0 | 4 | சோதிட பிரஞான தீபிகை | 2 | 0 |

## பெரிய எழுத்து புஸ்தகங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ரீராமர் அசுவமேத யாகம் | 1 | 8 | மதுரைவீரன் கதை | 0 | 4 |
| தருமர் அசுவமேத யாகம் | 0 | 8 | நல்லதங்காள் கதை | 0 | 4 |
| ஆதி பர்வம் | 1 | 8 | பஞ்சபாண்டவர் வனவாசம் திக் | 0 | 12 |
| விராட பர்வம் | 1 | 0 | [illegible] தின் | 0 | 8 |
| மதன காமராஜன் கதை | 0 | 8 | அல்லியரசாணி மாலை | 0 | 6 |
| விக்கிரமார்க்கன் கதை திக் | 2 | 0 | பவளக்கொடி மாலை | 0 | 6 |
| [illegible] தின் | 1 | 0 | காத்தவராயன் கதை | 0 | 8 |
| [illegible] கதை | 0 | 6 | தேசிங்குராஜன் கதை | 0 | 4 |
| மயில் ராவணன் கதை | [illegible] | 4 | வைகுந்த அம்மானை | 0 | 8 |

## டிராமா தினுசு புஸ்தகங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சதி-அநசூயா | 0 | 4 | லவகுச சரித்திரம் டிராமா | 0 | 4 |
| சாவித்திரி சரித்திரம் | 0 | 4 | சத்குண சாவித்திரி | 0 | 4 |
| கோவலன் சரித்திரம் 2-பாகம் | 0 | 4 | ஞானசவுந்திரி டிராமா | 0 | 4 |
| [illegible] சகுந்தலா | 0 | 4 | வள்ளி சரித்திரம் | 0 | 3 |
| [illegible] | 0 | 4 | அல்லி அர்ச்சுனா | 0 | 4 |
| [illegible] டிராமா | 0 | 4 | மயில்ராவணன் சரித்திரம் | 0 | 4 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| ...லதங்கான் சரித்திரம் | 0 | 4 |
| ...தாவதாரம் டிராமா படங்களுடன் | 0 | 8 |
| ...ருஷ்ண லீலா | 0 | 5 |
| சாரங்கதரன் சரித்திரம் | 0 | 4 |
| குலேபகாவலி சரித்திரம் | 0 | 4 |
| ...தாரம் சரித்திரம் | 0 | 3 |
| பிரகலாத டிராமா | 0 | 3 |
| ...ண்டிராஜன் சரித்திரம் | 0 | 4 |
| வள்ளியம்மை பரதம் | 1 | 0 |
| கீர்த்தனைகள். | | |
| ராமாயண கீர்த்தனை திக்கு | 2 | 0 |
| " தின் | 1 | 0 |
| பழனியாண்டவர் கீர்த்தனை | 0 | 3 |
| முத்துதாண்டவர் கீர்த்தனை | 0 | 4 |
| சுப்பிரமணியர் கீர்த்தனை | 0 | 4 |
| ...ந்தனர் சரித்திர கீர்த்தனை | 0 | 6 |
| " உயர்ந்த பதிப்பு | 0 | 12 |
| இராமதாஸ் கீர்த்தனை | 0 | 4 |
| வேதநாயகம் பிள்ளை கீர்த்தனை | 0 | 12 |
| பராங்குசதாசர் கீர்த்தனை | 0 | 4 |
| ஆஞ்சநேயர் கீர்த்தனை | 0 | 2 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| அச்சுதந்தாசர் கீர்த்தனை | 0 | 4 |
| " 2-ம் பாகம் | 0 | 6 |
| " 3-ம் பாகம் | 0 | 6 |
| தியாகராஜர் கீர்த்தனை | 0 | 8 |
| பண்டரி கீர்த்தனை | 0 | 4 |
| இந்துஸ்தான் பஜனைகீர்த்தனை | 0 | 4 |
| பாண்டியதாஸ் கீர்த்தனை | 0 | 5 |
| பாஸ்கரதாஸ் கீர்த்தனை இரண்டு பாகமும் | 0 | 10 |
| வெள்ளைசாமிதாஸ் கீர்த்தனை இரண்டு பாகமும் | 0 | 10 |
| முத்துசாமி கவிராயர் பக்தி ரசக்கீர்த்தனை 2-பாகம் | 0 | 10 |
| வேல்சாமி பக்திரசகீர்த்தனை (2-பாகம்) | 0 | 10 |
| கதிரேசன் ஆனந்தகளிப்பு | 0 | 4 |
| பாஸ்கரதாஸ் இயற்றிய தேசாபிமானிகள் செந்தமிழ் திலகம் 2-பாகம் | 0 | 10 |
| ஸ்ரீ பால தண்டாயுதபாணி பக்திரச கீர்த்தனை | 0 | 4 |

# கமலநாதன்

அல்லது

## களவுபோன ரத்னமாலை

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்கள் இயற்றியது

இதில் கதாநாயகனாகிய கமலநாதன் என்பவனுடைய சகோதர வாஞ்சையும் பெருந் தன்மையான குணமும் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டிய விஷயங்க ளென்பது இதை வாசிப்போர்க்கு செவ்வனே விளங்கும்.

கதாநாயகன்மேல் வரும் அபாண்டமான கொலைக் குற்றத்திலிருந்து அவனைத் தப்புவிப்பதற்காகத் துப்பறிபவன் காட்டும் சாமர்த்தியமும், தீரமும் வாசிப்போர்க்கு மிக்க வியப்பை யுண்டாக்கும். இதில் இரத்தனமாலை களவுபோனதும் உண்மையே யெனினும், அது சொந்தக்காரரின் பாதுகாப்பைவிட்டு வெளியில் போகவில்லை யென்ற விஷயம் மிக்க அதிசயத்தை விளைவிக்கும். அறிவைக் கூர்மைப்படுத்துவதில் இத்தகைய நாவல்கள் மிக்க அனுகூலமானவை இந்த நாவல் ஆரம்ப முதல் இறுதி வரையில் வாசிப்பவர் தன் மனதைக் கவரும் என்பது வாசிப்போர்க்கு எளிதில் விளங்கும்.

விலை ரூபா 1 8 0

இ. கோவிந்தராஜுலு நாயுடு, சௌகார்பேட்டை போஸ்ட், சென்னை

2-78

# சரீர மர்ம சாஸ்திரம்

ஒரு மானிட இன்ப நூல்

தமிழ்ப் பாஷையிலும் இவ்வளவு பூர்ணமான இரகசிய சாஸ்திரம் இது வரையில் எவராலும் பகிரங்கமாய் வெளியிடப்படவில்லை. இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது மர்ம ஸ்தானங்களின் அமைப்பும், அவைகளின் நேர்மையான உபயோகங்களும் ரதி மன்மத சிருங்கார ரகஸ்யங்களும் ஆண், பெண், சிசு உற்பத்தி விபரமும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும் அதைப் போக்கத் தக்க சிகிச்சைகளும் மஹா ரிஷிகளால் மர்மமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும் விவாக மானவர்களுக்கும் இனிமேல் விவாகஞ் செய்துகொள்ளும் சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றி யமையாத நூல். இதன் விலை ரூபா 1.

# கப்பற் கொள்ளைக்காரர்கள்

## அதிபயங்கரமான 2-படுகொலை

ஆயிரக்கணக்கான துப்பறியும் நாவல்கள் வெளி வந்திருப்பினும் இதைப் போல் நெஞ்சம் திடுக்கிடும் விதமான துப்பறியும் நாவல் இது வரையில் வெளி வரவில்லை யென்றே சொல்லலாம்.

நடுக்கடலில் கப்பல் மூழ்கடிக்கப்படுவதும் தெய்வ அருளால் பயங்கரமான தீவில் தன்னந்தனியாய் வாசம் செய்வதும், கப்பற் கொள்ளைக்காரர்களுடைய கடுங்கோரச் செயல்களும் படிக்கப் படிக்கப் பயங்கரத்தை விளைவிக்கும். கதையை முடிக்காமல் எவ்விதமான அவசர வேலை யிருந்தபோதிலும் கதையின் முடிவைத் தெரிந்த பிறகே செய்யச் செல்லுவார்கள்.

விலை ரூபா 1—4—0

# இராஜராஜேஸ்வரி

அல்லது

## கற்பின் வெற்றி

இல்லாள் தன்னுடைய குடும்பத்தில் நடந்து கொள்ள வேண்டிய கடமைகளைப் பற்றியும் கணவனுக்கு எத்தகைய துன்பம் நேர்ந்த காலத்திலும் தனக்கு நேர்ந்ததுபோல் பாவித்து கணவனை தன் உயிர்போல் காப்பாற்றும் விதமும், எத்தகைய காலத்திலும் கற்பைக் காத்துக்கொள்ள வேண்டிய தந்திரங்களும், ஒவ்வொரு பெண் மக்களும் அறிந்து கொள்ளவேண்டியது முக்கிய கடமையாகும். ஆகையினால் நெஞ்சு பதைக்கும் விதமான துப்பறியும் நாவல் ரூபமாக அநேக அருமையான நீதிகளுடன் எழுதப்பட்டுள்ளது, இதை ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டியது அவசியம். விலை ரூபா 1—8—0

இ. கோவிந்தராஜுலு நாயுடு, சௌகார்பேட்டை போஸ்ட், சென்னை

வெளிவந்து விட்டன! வெளிவந்து விட்டன!

சிறந்த பாடல்கள். குறைந்த விலை.

# ஸ்ரீபாலதண்டாயுதபாணி
# பக்திரசக் கீர்த்தனங்கள்

முத்தமிழ் வித்வான்

**MR. VR. A. மாயப்பன் அவர்களால்**

இயற்றியது

விலை அணா 0—4—0

இட்டா. பார்த்தசாரதி நாயுடு அண்ட் சன்ஸ் புக்ஷாப், மதுரை.

---

# ஆயிரம் தலைவாங்கிய
# அதிசய சிந்தாமணி

ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணியின் வெற்றியை நீங்கள் வாசித்திருக்கிறீர்களா? "அதிசய சிந்தாமணி" என்னும் பெயராலேயே கௌரவம் பெற்ற இந்த அபூர்வ நாவல் அழகிய பதங்களால் தொடுக்கப்பட்ட இன்பகரமான வாக்கியங்களால் அலங்கரிக்கப்பட்டு நூல் முற்றிலும் உலக அனுபவங்களின் மயமாய் ஜ்வலிக்கின்றது.

சோகரஸம் ஒரு பக்கம், கருணாரஸம் ஒரு பக்கம், வீரரஸம் ஒரு பக்கம், ஹாஸ்யரஸம் ஒரு பக்கம் இப்படி நவரஸங்களும், நான் முன் நான் முன் என்று முன்பட்டு புத்தக முழுமையும் வியாபித்துக்கொண்டிருக்கிறது.

தலைவாங்கியதாய் இப்பொழுது எத்தனையோ கதைகள் பெருகிவிட்டன. உலகத்தில் பெயர் ஒன்றாயினும் மதிப்பு ஒன்றாகாது. மாடு என்னும் பெயர் எல்லா மாடுகளுக்கும் உரியது. ஆயினும் ஒன்றின் விலை பத்து ரூபாய், மற்றொன்றின் விலை நூறு ரூபாய். பெரிய கருங்கல்லின் விலை ஒரு ரூபாய். சிறிய ரத்தக்கல்லின் விலை பதினாயிரம் ரூபாய். ஏன் இத்தனை வித்யாஸம்? அதன் குணத்துக்கும் நலத்துக்கும் தக்கபடி மதிப்பு வேறுபடுவதாலன்றோ? அவ்விதம் "தலைவாங்கியதான" பெயர் பொதுவாயிருப்பினும், அவ்வித புஸ்தகங்களிலெல்லாம் அதியுன்னதமாய்க் கொண்டாடத் தக்கது அதிசய சிந்தாமணியே என்பதை அதைப் படித்தவர்கள் தாங்களே நிச்சயிக்கும்படி அத்தனை சொருசாய் நவரசங்களும் பொருந்தி வெகு அற்புதமாக இந்த நாவல் பரிமளிக்கின்றது.

ஆதலின் ஒவ்வொருவரும் உத்தமமும் உயர்தரமுமான இந்த அதிசய சிந்தாமணி நாவலைப்பெற்று தங்களின் குடும்பப் பொக்கிஷமாகக் கொள்ள வேண்டுகிறோம். இந்நாவலின் விலை ரூபாய் ஒன்றே. உடனே எழுதுங்கள்.

இட்டா. பார்த்தசாரதி நாயுடு அண்ட் ஸன்ஸ் சௌகார்பேட்டை போஸ்ட்

# விக்கிரமாதித்தன் கதை.

இது பூர்வத்தில் மகா பிரக்யாதிபெற்று நவரத்தின கசிதமான முப்பத்திரண்டு பதுமைகள் சூழ்ந்த சிம்மாசனத்தில் வேதாளத்தையே வாகனமாகக் கொண்டு 2000-வருடங்கள் அரசியற்ற அற்புத லீலைகள் புரிந்த விக்கிரமாதித்தனென்னும் அரசன் பிரபாவங்களை அம்மன்னனுக்குப் பின்னால் அரசியற்றிய வீர சூர தீர பராக்கிரமசாலியாகிய போஜமகா ராஜனுக்கு விநோதாச்சரிதம், மதனாபிஷேகம், சோமனவல்லி, மங்களகல்யாணி, மந்திரமனோன்மணி, சிங்காரமோகனவல்லி, பரிமளமோகினி, கிருபாபரிபூரணி முதலிய 32-பதுமைகள் சொல்லிய அருமையான ஆச்சரிய கதைகள், இடையிடையே பல விசித்திர ஆனந்தக் கதைகள் இதிலடங்கியிருக்கின்றன.

ஆண், பெண், பால, பாலிகைகள் யாவரும் எளிதில் வாசிக்கும்பொருட்டு, இம்மாதிரியான பெரிய எழுத்தில் 628-பக்கங்கள் அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை தின்கடிதம் ரூபா 1 0 0 இக்கு கடிதம் 2 0 0

இட்டா. பார்த்தசாரதி நாயுடு & சன்ஸ்,

சௌகார்பேட்டை போஸ்ட், சென்னை.

---

சி. மு. சி. மொஹிதீன் பாவா ராவுத்தர்

ஸ்டீல் டிரங், அண்ட் ஷாப் வியாபாரம்.

183, 186, 188, செட்டித் தெரு, கொழும்பு.



ஸ்டீல் ட்ரங்க்பெட்டி, ஸ்கூல் புத்தகங்கள், நாவல், கதை டிராமா புஸ்தகங்கள், டிராமாவுக்கு உபயோகமான டோப்பாக்கள், கவரிமான், மனுஷமுடிகள், கூந்தலுக்கு உபயோகிக்கும் வாசனை எண்ணைத் தினுசுகள், வளையல் தினுசுகள், திறம் புதுக்கோட்டை வில்லைகள், ஜெதுபத்திகள், ரவிவர்மா படங்கள், வெள்ளி ஜமிக்கி வேலைசெய்த படங்கள், கையெழுத்துக் கண்ணாடிப் படங்கள், நாராயண ராவ் பல் பொடி, சுகந்த மூக்குத்தூள், மருந்து தினுசுகள், இன்னும் அநேகவிதமான சில்லரை சாமான்களும் நயமாக விற்கத் தயாராகயிருக்கிறது.

வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் கிரயம்போட்டு வி. பி. பி. மூலமாயனுப்புவோம்.

தந்தி விலாசம் : பிரம்மசியம்

தோற்ற கியாதிபெற்றது! நற்கீர்த்தி பிரபல்யமுற்றது! உயர் நிலைபெற்றது!

20-வருடகாலமாய் உலாவிக் கொண்டிருக்கும்

# ஸ்ரீ அம்பாள்

அண்டு கம்பெனியின்

# பட்டணம் பொடி

"ஸ்ரீ அம்பாள் பட்டணம் பொடியானது" சில பொடியைப்போல் சீக்கிரத்தில் வாசனை முதலானது மாறி மனதை வெறுப்படையச் செய்யாது. ஏனென்றால், கனவான்களுடைய அபிமானம் வேண்டுமென்கிற எண்ணத்தினால் நல்லமாதிரியான புகையிலையை வெளியூர்களிலிருந்து தருவித்து முதல் தாமான பொடிசெய்து வியாபாரிகளுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும், இதாருக்கும் அனுப்பி வருகிறோம். அவர்களும் எமது பொடியை உபயோகித்து வருவதுந் தவிர இஷ்டர்களுக்கும் வியாபாரிகளுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். அதுபோலவே தாங்களும் எமது பட்டணம் பொடியை உபயோகித்துப்பார்த்து தங்கள் இஷ்டர்களுக்கும் வியாபாரிகளுக்கும் சிபார்சு செய்வீர்களென்று கோருகிறோம்.

நமது "ஸ்ரீ அம்பாள் பட்டணம் பொடியானது" நல்ல மணமாகவும், காரமாகவும், அரைப்பு சுத்தமாகவும், கையிலெடுக்கும்போது அவ்வளவு உற்சாகத்தை கொடுக்கக்கூடியதும் ஞாபகசக்தியைத் தருவதும் கெட்டுப் போகாததுமான ஸ்ரீ அம்பாள் பட்டணம் பொடியை ஒரு முறை பரீக்ஷித்துப்பார்த்தால் தெரியும்.

| | | | |
|---|---|---|---|
| ரயில்வே பார்சலில் அனுப்ப விலை 1-க்கு | 3 | 14 | 0 |
| தபாலில் வீசை 1-க்கு | 4 | 3 | 0 |
| அரை வீசை | 2 | 4 | 0 |
| கால் வீசை | 1 | 5 | 0 |

---

"மேனகா கூந்தல்வளரும் தைலம்

(ரிஜிஸ்டர் செய்தது).

இந்த தைலம் பல மூலிகைகளின் ஆவியால் ஆக்கப்பட்டது. கூந்தலுக்கு வளர்ச்சியைத் தருவதோடு மிகுந்த வாசனையையுந் தரும். சிரசு சம்பந்தமான சகல வியாதிகளையும் நீக்குவதில் நிகரற்றது. இரண்டு வாரம் தலையிலில் தடவினால் மயிர் நாகப்பழம் போன்று கறுத்துப் பளபளப்பாயும் நீண்டும் காணும். உத்தரவாதமுள்ளது.

விலை:—

| | |
|---|---|
| 1 புட்டி 0–12—0 | 6 புட்டி 4—0—0 |
| 3 புட்டி 2—0—0 | தபால் சார்ஜு வேறு. |

ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனி,

பட்டணம் பொடி தொழிற்சாலை தபால் பெட்டி நெ. 3, மதுரை.

## குமரேசசதகம் பாட்டு உரை

குமரே[illegible] சதகம் என்பது குமரேசன் என்னும் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவு
டைய திருநாமத்தை மகுடமாகவைத்து நூறு செய்யுட்களால் பாடப் ரூபா—1.
துதி நூலாகிய ஓர் பிரபந்தம்.

## தாயுமானவர் பாடல் உரை

மும்முறை அச்சிட்ட தாயுமானவர் பாடல் மூலமும் உரையுமாகிய பதிப்பில் ஒவ்வொருபாட்டின் பதவுரையும் பாட்டின் கருத்தை எளி விளக்கக்கூடிய சூட்சுமமாகிய கருத்துரையும் எழுதிச்சேர்ந்து நாணய ன இனேஸ் கடிதத்தில் புது அச்சுகளால் மிகவும் தெளிவாக அச்சிட்டிருக்கிறது.

புல் கலிகோ பயிண்டு விலை ரூபா. 3 4 0

---

## விநாயகபுராண வசனம்.

சைவத் திருவாளர்காள்! நீங்கள் ஓர் பெரும் புதையலைப் பெறுங்கள். அப்புதையலிலுள்ள பொருள் இம்மை, மறுமை இரண்டிடங்களிலும் பலன் தரும்.

அது என்ன தெரியுமா?

## விநாயக புராண வசனமே.

சர்வ விஷயங்கட்கும் மூலகாரணராயுள்ள விநாயகப் பெருமானின் மான்மியத்தை அறியாதாரை அநிர்ஷ்டசாலிகள் எனல் வேண்டும். ஆகலான் விக்கினேச்சுரரின் உற்பத்தி, தன்மை, அவரின் பற்பல திருவிளையாடல், அவரைத் தொழும்விதம், தொழுதார் பெற்றபயன், முதலிய சகல விஷயங்களையும் செவ்விதான தமிழ் நடையில் வசனரூபமாய் பண்டைய சாஸ்திரத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. இதை பாலர் முதல் விருத்தர் வரை எளிதில் விளங்கவேண்டி அச்சிட்டுள்ளோம். பளபளப்பான இனேஸ் கடிதத்தில் பதிப்பித்து அழகிய கலிகோ பயிண்டு செய்தது. இந்த புத்தகத்தில் விநாயகர் பூசைக்குரிய அஷ்டோத்திரம், சகஸ்ரநாமம் முதலியனவும் அடங்கியுள்ளன.

விலை ரூ. 4—0—0. தபால் செலவு வேறு.

ஆனந்த விகடன்,

ஸௌகார்பேட்டை போஸ்டு,

சென்னை

## 20,000 ஜனங்களால் வாசிக்கப்பட்டு பிரபல்யம் பெற்றிருக்கிறது.

எமது லேடி டிரேட் மார்க் போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!!

சொல்லியபடி இப்புத்தகத்தில் இல்லாவிட்டால், உங்கள் பணத்தை திருப்பிவிடுகிறேம்.

# ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதி

கொஞ்சம் பிரதிகளே இருக்கின்றன.

குறைந்த விலை! அபரிமிதமான விஷயங்கள்.

**ஆர்டருக்கு முந்துங்கள், 60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்**

**தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் தெரிந்துகொள்ளலாம்.**

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் நன்றாய்த் திருத்தப்பட்டு 6-ம் பதிப்பாக பிரகரிக்கப்பட்டிருக்கிறது. உடனே எழுதுங்கள்.

உபாத்தியாயர் இல்லாமல் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இது தான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும், அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, கருமாதி கோட்டுங்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும், அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுருக்கமான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும், கிராமமுனசிபு, கர்ணங்களுக்கும், போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கும், இலங்கை முதலிய தேயிலை காபி தோட்டங்களிலிருக்கும் கங்காணிமார்களுக்கும் மிகவும் முக்கியமானது. முழு கலிகோ பைண்டு

**புத்தகம் 1-க்கு விலை ரூபா 2.**

பினங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன்பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்தர் செய்து அனுப்பப்படும்.

**கி. இராஜகோபால் முதலியார்,**
102, ...சாவடித் தெரு, மதராஸ்.






Printed by P. R. Rama Iyar & Co., and Published by E. Govindarajulu Naidu, Madras.



1622881